பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 29 செவ்வாய்க்கிழமை 14.03.2023 கதிர் 125

## போதையுடன் தொடர்புடைய 6 பேர் கைது

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணக் குடா நாட்டில் போதைப் பெருள் விற்பனை மற்றும் பாவனை யுடன் தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஆறு பேரை பொலிஸார் கைது செய்து மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இவர்கள் போதைப் பொருள் பாவனையாளர் தானா என்பதனை உறுதி செய்வதற்காகவே இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது. அவர்களில் நால்வர் போதைப் பொருள்

☞2

## மாணவன் மாடியிலிருந்து குதித்தது நிகழ்நிலை விளையாட்டு விபரீதமா?

### பின்னணி குறித்த விசாரணைகள் தீவிரம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஒருவன் மூன்றாம் மாடியிலிருந்து குதித்த சம்பவத்தின் பின்னணியில் நிகழ்நிலை (ஒன்லைன்) விளையாட்டு விபரீதங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று விசாரிக்கத் தொடங்கியிருக்கின்றனர் அதிகாரிகளும் பொலிஸாரும்.

பாடசாலையில் சாதாரண தரம் கற்கும் மாணவன் திங்கட்கிழமை மூன்றாம் மாடியிலிருந்து குதித்துள்ளான். மின்சார வயர்களில் சிக்கித் தடுக்கப்பட்ட பின்னரே அவன் நிலத்தில் வீழ்ந்தான் என்பதால் உயிருக்கு ஆபத்தான அடிகாயங்கள் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

வீழ்ந்த மாணவனை மீட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட மாணவன் ஆபத்தான கட்டத்தில் இல்லைஎன்றுதெரிவிக்கப்பட்டது.

தான் தனது உயிரை மாய்த்துக்கொள்வதற்கான காரணங்கள் என்று தெரிவித்து மாணவன் எழுதிய 7 பக்கக் கடிதம் ஒன்று மாணவனிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மாணவன் கணினி மற் றும் நிகழ்நிலை விளையாட்டுக்களில் தீவிர ஈடுபாடுள்ளவர் என்பதால், புளூவேல் போன்ற விளையாட்டுக்களால் அவர் இத்தகைய முயற்சிக்குத் தூண்டப்பட்டாரா என்கிற கோணத்தில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதே மாணவன் இதற்கு முன்னரும் இத்தகைய முயற்சியாக தனக்குத் தானே வெட்டுக்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவை தொடர்பில் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியைத் தொடர்ந்து ஈபிடிபியினரும் தமது கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். வேடிக்கை என்னவென்றால் இந்த நடவடிக்கைகளால் நடக்கப்போவது ஒன்றும் இல்லை என்று தெரிந்துகொண்டும் அவர்கள் இதில் இறங்கியிருப்பதுதான்.

உள்ளூராட்சி மன்றங்களில் கடந்த தடவை தமது கட்சிகளில் போட்டியிட்டு விட்டு வரப்போகும் தேர்தலில் வேறொரு கட்சியில் போட்டியிட இருக்கின்ற கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகவே இந்த இரு கட்சிகளும் நடவடிக்கை எடுப்பதற்குத் தொடங்கியிருக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் அரசுக் கட்சி தனது உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கும் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளது. அதாவது தனது கட்சிச் சின்னத்தில் போட்டியிட்ட புளொட், ரெலோ கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் உங்களை ஏன் கட்சியைவிட்டு நீக்கக் கூடாது என்று விளக்கம் அளிக்கச் சொல்லிக் கேட்டுள்ளது.

உங்கள் கட்சியிலேயே உறுப்பினர் இல்லாத நான் உங்களுக்கு ஏன் விளக்கம் அளிக்கவேண்டும் என்று அந்தக் கடிதங்களைத் தூக்கிக் கடாசிவிட்டுப் போய் விடுவார்கள் என்று தெரிந்தும் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டதற்கான சூட்சுமம் கட்சித் தலைமை மட்டுமே அறிந் தது.

உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் கட்சியின்

☞2

## கிளி. மாணவர்கள் வெயிலில் அமர்ந்து பரீட்சை எழுதினரா?

### விசாரணைகளைத் தொடங்கினர் அதிகாரிகள்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்ச் 14

கிளிநொச்சி சென் திரேசா பாடசாலையில் திறந்த வெளியில் வெயிலில் அமர்ந்து மாணவர்கள் பரீட்சை எழுதியது தொடர்பான விசாரணைகளை கல்வி அதிகாரிகள் தொடங்கியுள்ளனர். இது தொடர்பில் தனக்கு அறிக்கை தருமாறு ஆளுநர் ஜீவன் தியாகராசா கேட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சென் திரேசா பாடசாலையில் திங்கட்கிழமை மாணவிகள் திறந்தவெளியில் வெயிலில் அமர்த்தப்பட்டு பரீட்சை எழுத வைக்கப்பட்டனர் என்கிற குற்றச்சாட்டு மாகாண ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டவரப்பட்டது.

உடனடியாக இது தொடர்பில் விசாரித்துத் தனக்கு அறிவிக்குமாறு ஆளுநர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்.

## கட்சி தாவியோர் மீது ஈபிடிபியும் நடவடிக்கை

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்.மார்ச் 14

ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினராக உள்ளபோதும் பிற கட்சிகளின் வேட்பு மனுவில் போட்டியிடும் பலரை கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கிறது அந்தக் கட்சி. முதல் கட்டமாக அவர்கள் விலகியது தொடர்பில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியில் நிரந்தர உறுப்பினராக இருந்து கொண்டு பிற கட்சிகளில் போட்டியிடும் உறுப்பினர்களிடமே முதல் நடவடிக்கையாக விளக்கம் கோரப்பட்டது.

இவ்வாறு கட்சியில் இருந்து விலக்கும் நடவடிக்கையில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள் மூவர் உட்படபல உறுப்பினர்களிற்கு கட்சியின் அமைப்பாளரால் முதலில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

☞2

## ஜனாதிபதி பிரதிநிதிகள் நடத்திய தொழிற்சங்கங்களுடனான நேற்றைய பேச்சு தோல்வி

### போராட்டம் தொடருமென அறிவிப்பு

(தன்வீன்)

மார்ச் 15 பொது வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள தொழிற்சங்கங்களுக்கும் ஜனாதிபதியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் திங்கட்கிழமை நடைபெற்ற நீண்ட நேரப் பேச்சு இணக்கம் எதுவும் எட்டப்படாத நிலயில் தோல்வியில் முடிந்தது. இதையடுத்து தற்போது நடந்துவரும் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டபடி பொது வேலை நிறுத்தம் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் ஆகியோருக்கும் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பொன்று இரவு 7 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

சுமார் இரண்டு மணிநேரமாக நடைபெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே செய்தியாளர்களிடம் பேசும் போது பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன என்றார்.

☞2

## ஜனாதிபதிக்கு 'அபிநந்தன' விருது



தொழில்சார் சட்டத்துறையில் 50 வருடங்கள் பணியாற்றிய இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களைப் பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட 'அபிநந்தன' விருது விழா திங்கட்கிழமை இரவு கொழும்பு, சினமன் கிராண்ட் சொகுசு விடுதியில் நடைபெற்றது.

50 வருட தொழில்சார் சட்டப் பணியை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இங்கு கௌரவிக்கப்பட்டதுடன் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஜனாதிபதிக்கு 'அபிநந்தன' விருதை வழங்கி வைத்தார்.

'இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய வருடாந்த மாநாடு - 2023' நிகழ்வோடு

☞2

## தமிழர்களின் பிரச்சினைக்கு 13 ஊடாகத் தீர்வு கிட்டாது

### ஜே.வி.பி. தலைவர் திட்டவட்டம்

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாகத் தீர்வை வழங்க முடியாது. அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய அரசமைப்பின் ஊடாகவே தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற முடியும்.

இவ்வாறு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"தமிழர்களின் பிரச்சினைகளுக்கு 13ஆவது திருத் தத்தின் ஊடாக - மாகாண சபைகளின் ஊடாக தீர்வைப் பெற முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" - என்று தெற்கு ஊடகம்

☞2

## நாட்டைக் குட்டிச் சுவராக்கிய ராஜபக்ஷ குடும்பத்தினரை சிறையில் தள்ள வேண்டும்

### முன்னாள் சகா விமல் கோஷம்

நாடு வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு ராஜபக்ஷ குடும்பம்தான் பொறுப்புக்கூற வேண்டும். இந்தக் குடும்பத்தைச் சிறையில் அடைத்தே தீர வேண்டும்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மொனராகலையில் திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2019ஆம் ஆண்டு நாட்டு மக்கள் சிறந்த மாற்றத்துக்காகக் கோட்டபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

☞2

## தொழிற்சங்கப் போராட்டத்தால் சுகாதாரத்துறைக்கு பாதிப்பில்லை

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும், விசேட வைத்திய நிபுணர்கள் சங்கமும் நான்கு மாகாணங்களில் திங்கட்கிழமை முன்னெடுத்த போராட்டங்களால் எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று சுகாதாரத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் விதித் துள்ள புதிய வரி சம்பந்தமாக தொழிற்சங்கத்தினர் எம்முடன் பல சந்திப்புகளை நடத்தினார்கள்.

காலையிலும் மாலையிலும் வருகை தந்து நீண்ட கலந்துரையாடல்களை எம்முடன் மேற்கொண்டார்கள். ஆனால் கலந்துரையாடல்

☞2

## துறைமுக தொழிற்சங்க ஒன்றியத்தினர் கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம்

### 48 மணிநேரத்தில் தீர்வில்லையேல் 15ஆம் திகதி நாட்டை முடக்குவோம் எனவும் சூளுரை

(தன்வீன்)

முறையற்ற வரி விதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து துறைமுக தொழிற்சங்க ஒன்றியத்தினர் திங்கட்கிழமை காலை முதல் அடுத்த 48 மணி நேரத்துக்கு மெதுவாக பணியாற்றும் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், கொழும்புத் துறைமுகத்தின் பிரதான வாயிலில் நேற்று நண்பல் ஒன்றுகூடிய துறைமுக தொழிற்சங்க ஒன்றியத்தினர் பெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்றை மேற்கொண்டார்கள்.

கொழும்பு துறைமுகத்தின் பிரதான வாயிலை முடக்கும் வகையில் துறைமுகவீதி நெடுக்கிலும் பதாகைகளுடன் காணப்பட்ட தொழிற்சங்க ஒன்றியத்தினர் அரசுக்கு எதிரான தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி குரல் எழுப்பினார்கள்.

பேச்சுக்கள் ஊடாக எமது கோரிக்கைகளை நிறைவேற்ற நாம் முயற்சிகள் எடுத்தோம். ஆனால் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இணங்கவில்லை. இந்த நிலையில் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கால அவகாசத்தை

☞2

## தோட்டாக்களைப் பயன்படுத்தாமல் மக்கள் பக்கம் நின்ற சவேந்திர சில்வாவை பாதுகாத்தே தீருவோம்

### ஜே.வி.பி. தலைவர் உறுதி



அரகலய மக்கள் எழுச்சியின்போது அதனை ஒடுக்குவதற்குத் தோட்டாக்களைப் பயன்படுத்தாமல் மக்கள் பக்கம் நின்ற முன்னாள் தரைப் படைத்தளபதியும் பாதுகாப்புப் பதவி நிலை தலைமை அதிகாரியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்குத் தேவையான நடவடிக்கையை முன்னாள் தளபதி சவேந்திர

☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயலாளர் ஒரு உறுப்பினரைப் பதவி நீக்கம் செய்து, அவரைக் கட்சியிருந்தும் நீக்கிவிட்டுஅதைத்தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவித்தால் அவரது உள்ளூராட்சி மன்ற உறுப்புரிமை பறிபோய்விடும். இந்தச் சட்ட ஏற்பாடு அந்தந்தக் கட்சிகளின் அடிப்படை உறுப்புரிமையைக் கொண்டவர்களுக்குத்தான் பொருந்தும்.

இங்கேதான் அப் படி கட்சிகளின் அடிப்படை உறுப்புரிமை கொண்டவர்களுக்கு கட்சிப் பட்டியலில் வாய்ப்புக் கொடுப்பதைவிட வேறு ஆட்களுக்குத்தானே வாய்ப்பு அதிகம் கொடுக்கப்படுகின்றது. கூட்டமைப்பு என்கிற பெயரில் தமிழ் அரசுக் கட்சி பட்டியலில் போட்டியிட்ட பலர் வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். பின்னர் அவர்கள் மீது தமிழ் அரசுக்கட்சிச்செயலாளர்எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? அப்படியே எடுத்தாலும் அந்த உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் மணிவண்ணனைப்போன்று நீதிமன்றத்தை நாடினால் தனது உறுப்பினர்பதவியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

மணிவண்ணனும் அவரது 9 தோழர்களும் யாழ். மாநகர சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில்போட்டியிட்டவர்கள். ஆனால் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடாக காங்கிரஸ் பட்டியலில் போட்டியிட்டவர்கள். காங்கிரஸ் அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கியதும் தாங்கள் அந்தக் கட்சியின் உறுப்பினர்களே இல்லை, பின்னர் எப்படித் தங்களை அந்தக் கட்சியின் செயலாளர் நீக்கமுடியும் என்றும், முன்னணியின் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் முறையான விசாரணைகள் எதுவும் இன்றித் தம்மை முன்னணியில் இருந்து நீக்கியுள்ளார் என்றும் தெரிவித்து நீதிமன்றை நாடினார்கள். அதன் மூலம் பதவிக் காலம் மடியும் வரை உறுப்பினர்களாகவே தொடர்கிறார்கள்.

அதுபோலவே தமிழ் அரசுக் கட்சி நடவடிக்கை எடுத்தாலும் நடக்கும். அங்காவது முன்னணிக்கு என்று ஒரு தலைவர், செயலாளர் இருக்கிறார்கள். கூட்டமைப்பில் அதுவும் கிடையாது என்ற நிலையில் பங்காளிக் கட்சி உறுப்பினர்களுக்குக் கடிதம்கூட கூட்டமைப்புப் பெயரில் அனுப்ப முடியாது. அப்படியிருந்தாலும் அவர்களுக்கும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கிறது தமிழ் அரசுக் கட்சி. காசா, பணமா, விளக்கம் தானே என்று நினைத்திருப்பார்கள் போலும்.

இதற்கு மேல் சொந்தக் கட்சிஉறுப்பினர்களுக்குதமிழ் அரசுக்கட்சியும்சரிஈபிடிபியும் சரிஇப்போதுவிளக்கம்கேட்டு, இனி விசாரணை நடத்தி, எப்போது அவர்களைக் கட்சியை விட்டு நீக்கி, எப்போது தேர்தல்கள்திணைக்களத்திற்கு அறிவிப்பது? அதற்கிடையில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் இன்னும் ஐந்தே நாட்களில் முடிந்துவிடும். அதற்குப்பின்னர் அந்த உறுப்பினர்கள்தான் இன்னொரு கட்சியில்சேர்ந்துவேட்பாளரும் ஆகிவிட்டார்களே! அவர்கள் மீதுநடவடிக்கைஎடுத்தால்தான் என்ன விட்டால்தான் என்ன?

எல்லாம் ஒரு கலகலப்பு, கிளுகிளுப்புக்குத்தான் கட்சி அலுவல்கள் போலும்?

இதற்கிடையில் தமிழ் அரசுக்கட்சியின் தலைவரோ, சுமந்திரனோ தங்களுடைய கட்சித் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேசியிருந்தால் யாழ். மாநகர சபையில் தமிழ் அரசுக்கட்சி தங்கள் கட்சியின் ஆதரவுடன் ஆட்சி அமைத்திருக்கலாம் என்று ஈபிடிபி அறிவித்திருக்கிறது. அந்தக் கட்சி அத்தோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. அமைச்சரின் ஆலோசகரோடு நாடாளுமன்ற உறுப்பினர் உறுப்பினர்தான் இதுவிடயமாகப் பேசினார் என்றும் அதெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வழியில்லை என்றும் ஈபிடிபியின் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் தெரிவித்திருக்கிறார். கட்சிக்கே அடுத்த தலைவர் என்றிருக்கிற சிறீதரனை ஈபிடிபி கட்சி வேண்டுமென்றே இப்படி மூன்றாம் மட்டத் தலைவர் போன்று குறிப்பிட்டு அவமானப்படுத்தியதை எதிர்த்து எந்தவொரு இரத்தத்தின் இரத்தமும் கோபம்கொண்டு கொத்தித்ததாகத் தெரியவில்லை என்பது சுவாரஸியம்.

**- இடிமின்னல் -**

## போதையுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயன்படுத்துவது சோதனைகளில் உறுதி செய்யப்பட்டது.

எஞ்சிய இருவரும் பெண்கள் எனவும் அவர்கள் போதைப்பொருள விற்பனை அல்லது கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும பொலிஸார் தெரிவித்தனர்.

## கட்சி தாவியோர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் அமைப்பாளர் எப்படித் தங்களிடம் விளக்கம் கோர முடியும் என உறுப்பினர்கள் பதில் வழங்கியதை அடுத்து, கட்சியினால் நியமிக்கப்படும் மூவர் அடங்கிய விசாரணைக் குழுமுன் தோன்றி விளக்கமளிக்குமாறு செயலாளரினால் மீண்டும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இருக்கின்ற அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாகவோ - அதில் அதிகாரத்தைக் கூட்டியோ அல்லது குறைத்தோ தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க முடியாது.

அனைத்துஇனமக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய அரசமைப்பின் ஊடாகவே நிலையான-சரியானதீர்வைப் பெற முடியும்.

தெற்கு மக்கள் நிராகரிக்கும் தீர்வு ஒருபோதும் தமிழர்களுக்கான தீர்வாக அமையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

தற்போதைய அரசால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு வழங்க முடியாது. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்தே தீரும் - என்றார்.

## தொழிற்சங் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சில், நாம் தற்போது முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான எவ்விதமானபதில்களும்அவர்களால் வழங்கப்படவில்லை.

வைத்திய நிபுணர்கள் சங்கம், அரசவைத்திய அதிகாரிகள் சங்கம், மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள் திங்கட்கிழமை மேற்கொண்ட பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பில் அதிகாரிகள் எந்தக் கவனமும் செலுத்தவில்லை.

இந்த நிலையில், எம்முடனான கலந்துரையாடல் குறித்த ஆய்வறிக்கையொன்றை ஜனாதிபதிக்கு நாளையதினம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறான நிலையில், நாம், ஜனாதிபதி எமது தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பிலான அரசியல் தீர்மானத்தினை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

அந்த வகையில் அரச மருத்து அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை செவ்வாய்க்கிழமையும் முன்னெடுக்கப்படவுள்ளது. ஐந்து மாகாணங்களுக்குப் போராட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது - என்றார்.

## ஜனாதிபதிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணைந்ததாக இந்த விருது வழங்கும் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 3 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன.

ஜூலியானா மார்கரெட் கொஸ்வத்த, வோல்டர்லெஸ்லி டி சில்வா, இரத்னசபாபதி ஆறுமுகம் ஜெகதீசன், ஜனாதிபதி சட்டத்தரணி உபாலி ஏ. குணரத்ன. கனகரத்னம் கணேஸயோகன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர், நீதியரசர் அசோக நிஹால் டி சில்வா, நீதியரசர் டி.ஜே.த.எஸ். பாலபடபெந்தி, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன உட்பட26சட்டத்தரணிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ், 'அபிநந்தன' குழுவின் தலைவர் ஜனப்ரித் பெர்னாண்டோ, இணைப்பாளர் சமத் பெர்னாண்டோ உள்ளிட்ட தலைமை அதிதிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ராஜபக்ஷ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆட்சி மாற்றத்துக்கு முன்னின்று செயற்பட்டோம். நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. மாறாக ராஜபக்சக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியது.

குடும்ப ஆட்சி காரணமாக நாட்டு மக்கள் 2015ஆம் ஆண்டு ராஜபக்ஷக்களைப் புறக்கணித்தார்கள். இந்த நிலை மீண்டும் தோற்றம் பெறாது, வரலாற்று பாடத்தை ராஜபக்ஷக்கள் கற்றுக் கொண்டுள்ளார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால், எமது எதிர்பார்ப்பு இறுதியில் பொய்யானது.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் அமைச்சரவையைப் பகுதியளவில் ஆக்கிரமித்த ராஜபக்ஷக்கள் 2020 ஆம் ஆண்டு அமைச்சரவையை முழுமையாக ஆக்கிரமித்தார்கள்.

போதாதற்கு ரோஹித ராஜபக்ஷவைத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது கடும் எதிர்ப்பால் அந்த முயற்சியை ராஜபக்ஷக்கள் கைவிட்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதாரம் தொடர்பில் அடிப்படைத் தகைமை இல்லாத பஸில் ராஜபக்சவை நிதி அமைச்சராக நியமித்து அரசியல்ரீதியில்பெரும்தவறு செய்தர். இறுதியில் நாட்டை விட்டு தப்பிச் சென்றார். நாடு வங்குரோத்து நிலை அடைந்தமைக்கு ராஜபக்ச குடும்பம் பொறுப்புக்கூற வேண்டும். இந்தக் குடும்பத்தைச் சிறையில் அடைத்தே தீர வேண்டும்.

ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதற்காகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்கள் ரணில் விக்கிரசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் வாக்குரிமையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார். போராடியேனும் நாட்டு மக்களின் வாக்குரிமையை வெல்வோம் - என்றார்.

## தொழிற்சங்கப் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முடிந்துஅறையிலிருந்துவெளியேறிஊடகங்களைபார்த்ததும் எம்முடன் கலந்துரையாடிய விவரங்களுக்கு எதிரான கதைகளைக் கூறுகிறார்கள்.

எனக்கு அவர்களின் செயற்பாடுகள் வேடிக்கையாக இருக்கிறது. எம்முடன் பேச்சு நடத்தி இணக்கப்பாடுகளை தெரிவித்துவிட்டு பிறிதொரு கதையை பிரசாரம் செய்வதனால்தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இன்றைய நாளில் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கமும், அரசவைத்திய அதிகாரிகள் சங்கமும் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளதாக கூறியுள்ளன. எனக்குகிடைத்த தகவல்களின்படி இன்றைய (நேற்றைய) போராட்டத்தில் சுகாதாரத்துறைக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இடம் பெறவில்லை. வழமை போன்று செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆகவே போராட்டங்கள் சம்பந்தமாக பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை - என்றார்.

## துறைமுக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்குகிறோம். மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னதாக எமது பிரச்சினைக்கு தீர்வுளிக்க விட்டால் அவருக்கு நிச்சயமாக பாடம் ஒன்றை கற்பிப்பதற்கு இம்முறை நாம் தீர்மானித்திருக்கிறோம் - என்றார் இந்தப் போராட்டத்தில்கலந்துகொண்ட இலங்கைத்துறைமுகசுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் பிரசன்னா களுதாரகே.

இரண்டு நாட்கள் மெதுவான பணி போராட்டத்தை அறிவித்துள்ள நாம் ஆட்சியாளர்கள் தீர்க்கமான முடிவு ஒன்று எடுப்பதற்கு காலத்தை வழங்கிஉள்ளோம். இக்காலப் பகுதியில் ஆட்சியாளர்கள் தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க தவறுமாக இருந்தால் எதிர்வரும் 15ஆம் திகதி இந்த நாடு முழுமையாக முடங்கும் என்பதில் எவ்விதமான சந்தேகமும் கொள்ள வேண்டாம் கொள்கின்றேன் என்றார் பொதுஜன முற்போக்கு சங்கத்தின் பிரதான செயலாளர் சியாமல் சுமனரத்ன.

## சவேந்திர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில்வா மேற்கொள்ளவில்லை என அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சவேந்திர சில்வா ஆட்சியாளர்களுக்குச் சார்பாக நடவடிக்கையை எடுக்காததால்தான் அவர் விசாரணைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது, எனவே, நீங்களும் அவ்வாறு இருக்க வேண்டாம் என மற்றைய தளபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கவே அவருக்கு எதிராக நடவடிக்கை தொடக்கப்பட்டுள்ளது.

சவேந்திர சில்வா தொடர்பில் சில விடயங்களில் எமக்குப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு அவர் தோட்டாக்களைப் பயன்படுத்தாமல் இருந்ததை மதிக்கின்றோம்.

மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்குத் தோட்டாக்கள் பயன்படுத்தாமை தொடர்பில் சவேந்திர சில்வாவுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு, அவருக்குத் தண்டனை வழங்க முயற்சி எடுக்கப்படுமானால் நாம் சவேந்திர சில்வாவின் பக்கம் நிற்போம். ஏனெனில் அன்று அவர் மக்கள் பக்கமே நின்றுள்ளார். குருதிச் சகதி தோன்றுவதைத் தடுத்துள்ளார் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622









# சீனா - இலங்கை மக்களுக்கு நல்ல எதிர்காலம் உருவாகும்

## ஷி ஜின் பிங்குக்கு அனுப்பிய வாழ்த்தில் ரணில் நம்பிக்கை



சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கின் மூன்றாவது பதவிக்காலத்தின் போது, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு, மேலும் வலுவடைந்து, இரு நாட்டு மக்களுக்கும் நன்மைபயக்கும் எதிர்காலம் உருவாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கைவெளியிட்டுள்ளார்.

ஷிஜின்பிங்கின் அனுபவமிக்க தலைமையின் கீழ், சீனா பல சவால்களை வெற்றிகொண்டு, பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் மூன்றாவது பதவிக்காலத்தில் சீனா நிச்சயமாக ஒரு புதிய பரிமாணத்துக்கான பாதையில் பயணிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதியாக மூன்றாவது தடவையாகவும் தெரிவுசெய்யப்பட்ட ஷி ஜின்பிங்குக்கு வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் சீன ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதியாக மூன்றாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதற்காக இலங்கை அரசினதும் மக்களினதும் அன்பான வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உங்களின் அனுபவம் வாய்ந்த தலைமையின் கீழ், சீனா பல சவால்களை வெற்றிகொண்டு மிகப் பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. உங்களது மூன்றாவது ஜனாதிபதி பதவிக்காலம் சீனாவுக்கு ஒரு புதிய பரிமாணத்துக்கான வழியை நிச்சயமாகத் திறக்கும் என்று நான் நம்புகின்றேன்.

இலங்கையும் சீனாவும் பல நூற்றாண்டுகளாக பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் சிறப்பான நட்புறவைப் பேணி வருகின்றன.

சர்வதேச நாணய நிதியச் செயற்பாடுகள் உட்பட குறிப்பாக இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்களை, வெற்றி கொள்வதில் சீன அரசு வழங்கும் உறுதியான ஆதரவை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

உங்களது மூன்றாவது ஆட்சிக் காலத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்ந்து வலுப்பெற்று, இரு நாட்டு மக்களுக்கும் நன்மைகளைப் பெற்றுத் தரும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

சீன ஜனாதிபதியே, சீன மக்கள் குடியரசின் நட்புறவைக்கொண்ட மக்களுக்கு சுபீட்சம் பெறவும் மற்றும் நீங்கள் மூன்றாவது முறையாக பதவியேற்றதற்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# எரிபொருள் விநியோகத்தை விரிவுபடுத்த உரிய வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பம்

## சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் உறுதியளித்தார் ஜனாதிபதி ரணில்

எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிக்க அரசு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது எனவும், அதற்கான முறையான வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று (13) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் தேவைக்காக எரிபொருள் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு தமது நிறுவனம் தயாராக இருப்பதாக சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதற்காக, தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக தமது நிறுவனம் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள அம்பாந்தோட்டையில் பிரதான வலுசக்தி மையத்தை, சுத்திகரிப்பு நிலையத்துடன், நிர்மாணிக்கத் தேவையான முழு முதலீட்டையும் தமது நிறுவனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதிக்கு அறிவித்தனர்.

எதிர்காலத்தில் நாட்டின் அபிலாகைளின் அடிப்படையில் உரிய அழைப்புகளுக்குப் பங்கேற்க தமது நிறுவனம் தயாராக இருப்பதாகவும் பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டனர்.

பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு மற்றும் விநியோகம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சினோபெக் நிறுவனத்தின் பிரதிநிதிகள், அது குறித்து தமது ஆலோசனைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் பின்னர், இலங்கை துரித அபிவிருத்தியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தகங்களை எதிர்காலத்தில் ஊக்குவிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன ஆகியோருடன் அரச அதிகாரிகள் மற்றும் சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# குருநகர் இழுவை மடிகளால் உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு

## மாட்டச் செலயருக்கு தீவக மீனவர்கள் மனு

உள்ளூர் இழுவை மடிப் படகுகளினால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்

இன்று மதியம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜோன் பொஸ்கோ, செயலாளர் வே.வின்சன், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளர் அ.அன்னராசா ஆகியோர் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரனை சந்தித்து இந்த மனுவைக் கையளித்தனர்.

அந்த மனுல் குருநகர் பகுதியை சேர்ந்த உள்ளூர் இழுவைமடி தொழிலாளர்களால் உள்ளூர் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவரர்களால் வலியுறுத்தப்பட்டது.

# அத்தியாவசிய சேவையாக அஞ்சல் சேவை பிரகடனம்

## வெளியாகியது அதிவிசேட வர்த்தமானி

அஞ்சல் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அதிவிசேட வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்களின் போராட்டத்தையடுத்து அஞ்சல் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

# வன்முறைகளுடன் தொடர்புபட்ட 5 பேர் யாழ்ப்பாணத்தில் கைது



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து இரண்டு வாள்கள் மற்றும் களவாடப்பட்ட 3 மூன்று மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தவருடம் ஒக்டோபர் மாதம் காரைநகரிலுள்ள வீடொன்றுக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற 6 பேர்கொண்ட கும்பல் வீட்டினைச் சேதப்படுத்தி தீவைத்து ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியிருந்தது.

இதுதொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்கிற குற்றச்சாட்டிலல் மூவவர் கைது செய்யப்படடுள்ளனர்.

அதேபோல் நாவற்குழி பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் நள்ளிரவு பணியாளரை ஒருவரை வாளால் வெட்டியய சம்பவம் தொடர்பிலும் பொலிஸராரினால் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த நபர்களும் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொ.மேனன் தலைமையின் கீழ் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் அதிகாலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடி போலி இலக்கத்தகடுகளை மாற்றிபயன்படுத்தியமையும் தெரியவந்ததுள்ளது.

சில போலி இலக்கத்தகடுகளும் வன்முறைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நவாலி, மானிப்பாய், காரைநகர், விசுவமடு பகுதிகளைச் சேர்ந்த 24 தொடக்கம் 26 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலும் மூன்று சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வசந்த முதலிகேயின் வருகை ஏன்?

அரகலயபோராட்டத்தின்நாயகர்களில்ஒருவரானவசந்த முதலிகே யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றிருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களும் தெற்கின் போராட்டங்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

அரகலயவின்போது இப்படி அவரோ வேறு எவருமோ வந்து ஆதரவளிக்கும்படி யாழ்ப்பாணத்து மக்களிடமோ அல்லது வடக்கு கிழக்குத் தமிழர்களிடமோ எந்தக் கோரிக்கையும் விடுக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அரகலய என்பது சிங்களவர்களின் பிரச்சினை, அதில் தமிழர்கள் வேடிக்கை மட்டும் பார்த்தால் போதும் என்கிற கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து சிலரால் முன்வைக்கப்பட்டபோதுகூட யாரும் அலட்டிக்கொண்டதில்லை.

அப்படியிருக்கும்போது இப்போது மட்டும் ஏன் வடக்கு மக்களின் ஆதரவு குறித்து வசந்த முதலிகே அக்கறைப்படுகின்றார்? அதற்கு இரண்டொரு காரணங்கள் உண்டு. அரகலய போராட்டத்தின்போது என்னதான் தமிழ், முஸ்லிம் மக்களும் தங்களுடன் இருக்கிறார்கள் என்று போராட்டக்காரர்கள் காட்ட முற்பட்டபோதும், அப்படித் தமிழ், முஸ்லிம் மக்களை ஈர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளை, முற்போக்கு அறிகுறிகளை அவர்கள் காட்டினர் என்கிறபோதும் பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம் மக்கள் அந்தப் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டே இருந்தார்கள் என்பது பெரும் உறுத்தலாகவே பார்க்கப்படுகின்றது. குறிப்பாக மேற்குலக நாடுகளால் இந்த விவகாரம் பெரும்பாலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதுவும் தவிர தெற்குப் பல்கலைக்கழக போராசிரியர்கள் மட்டத்திலும் இவை குறித்த ஆய்வுகளும், வாதப் பிரதிவாதங்களும் அதிகம் நிகழ்கின்றன. தமிழ் அரகலய போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டிருந்தார்கள் என்கிற கருத்தைப் பொய்ப்பிப்பதற்கு பல சிங்களப் பேராசிரியர்கள் விரும்புகிறார்கள்.

ஒருவேளை அதன் விளைவாகக்கூட முதலிகேயின் யாழ்ப்பாணப் பயணம் அமைந்திருக்கக்கூடும். அதுவும் தவிர, கோட்டாவைக் கலைக்கப்போக ரணில் அந்த இடத்தில் வந்து குந்தியிருந்த மாதிரி இல்லாத ஒரு போராட்டத்துக்கானன அடித்தளத்துக்குத் தமிழர்களின் ஆதரவும் இன்றியமையாதது என்றும் அவர்கள் கருதியிருக்கலாம்.

எப்படியிருந்தாலும் தமிழர்களைப் புறந்தள்ளிக் கொண்டு இலங்கையில் ஒரு உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்கிற உண்மையை ஒரு சிறிதளவேனும் சிங்களவர்கள், குறிப்பாக அவர்களின் எதிர்காலத் தலைமைகளாவது உணர்ந்திருப்பார்களாயின் அது வரவேற்கத்தக்கது. ஒரு அடிப்படை மாற்றம் என்று கொள்ளத்தக்கது.

அந்த மாற்றம் வளர்த்தெடுக்கப்படவேண்டியது. தமிழர்கள் பிரச்சினை தொடர்பில் அரசியல் மட்டம் தாண்டிய கலந்துரையாடல்கள் நிகழ்த்தப்படவேண்டியது அவசியம். தமிழர்கள் தனித்துப் போராட்டங்களை நடத்துவதால் கிட்டும் மாற்றங்களைவிட சிங்கள மக்களின் ஆதரவையும் அவை பெறும்போது கிடைக்கக்கூடிய பலாபலன்கள் அதிகம். எனவே கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி சிங்கள மக்களிடம் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களிடம் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலைக் கொண்டு செல்வதற்கும் தமிழர்களின் பிரச்சினை தேசியப் பிரச்சினையில் எவ்வளவு முக்கியமான, காத்திரமான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது என்பதையும் அவர்களுக்கு உணர்த்துவதும் அவசியம்.

அத்தகைய கலந்துரையாடல்களே எதிர்காலத்தில் அரசியல் பகிர்வு என்பது பிரிவினை என்கிற வகையில் பரப்புரை செய்யும் மூன்றாந்தர அரசியல்வாதிகளை உருவாக்குவதைத் தடுக்கும். எனவே இந்த வாய்ப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த மொட்டு ஒத்துழைப்பு வழங்கும்

## சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு

(தன்வீன்)

ஜனாதிபதி தேர்தலை வெகுவிரைவாக நடத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். அத்தேர்தலில் சவால்களை வெற்றிக்கொள்ள கூடியவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் அரசியல் கொள்கை ரீதியில் பாரிய வேறுபாடுகள் காணப்பட்டாலும் நெருக்கடியான சூழ்நிலையில் ஆட்சியை அவர் பொறுப்பேற்றமை வரவேற்கத்தக்கது.

நாட்டு மக்களை பொருளாதார பாதிப்பில் இருந்து மீட்டு எடுக்க தயார் என தற்போது பிரசாரம் செய்யும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது அரசாங்கத்தை பொறுப்பேற்க முன்வரவில்லை.

நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டு மக்களுக்காக சவால்களை பொறுப்பேற்பது உண்மையான தலைமைத்துவம், ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறந்த தலைமைத்துவம் உள்ளது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு குறைந்தது 10 வருடங்களேனும் செல்லும் என பொருளாதார நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் கடந்த காலங்களில் ஊடக சந்திப்புக்களை நடத்தினார்கள். நிறைவடைந்த 07 மாத காலத்திற்குள் ஜனாதிபதி நாட்டு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சகல தீர்மானங்களுக்கும் அரசியல் நோக்கமற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



தலைமையிலான எமது அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான தீர்மானங்களினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது, ஆகவே தவறை திருத்திக் கொள்வோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. தற்போதைய நிலையில் நாட்டு மக்கள் தேர்தலை கோரவில்லை, அரசியல்வாதிகளே தேர்தல் வேண்டும் என பிரசாரங்களை நடத்திக் கொள்கிறார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 8000 உறுப்பினர்களை தெரிவு செய்வதால் ஆட்சிமாற்றம் ஏதும் ஏற்படாது.

ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டுமாயின் ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். வெகுவிரைவில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மக்களால் ஏற்றுக்கொள்ள கூடிய ஒருவரையும், சவால்களை வெற்றிக்கொள்ள கூடியவரையும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் - என்றார்.

# நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை குழப்பியடிக்கவே இந்த போராட்டங்கள்

## சாடுகிறார் சமன் ரத்னப்பிரிய

கொழும்பு, மார்ச் 14 (தன்வீன்)

எதிர்வரும் 20ஆம் திகதி சர்வ தேசநாயண நிதியத்துடன் கையொப்பமிடப்படும் ஒப்பந்தத்தினை குழப்பியடிப்பதற்காகவே தொழிற்சங்கங்கள் போராட்டங்களில் களமிறங்கியுள்ளன என்று, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் திங்கட்கிழமை அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

சர்வதேசநாணயத்துடன் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இருப்பினும் தற்போது வரையில் இலங்கையுடன் மட்டுமே சர்வதேச நாணய நிதியம் சாத்தியமான சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளது. குறிப்பாக ஊழியர் மட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதே போல அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி நிதியளிப்புக்கான கைச்சாத்து இடம்பெறப்போகின்றது.

இவ்வாறான நிலையில் தொழிற்சங்களிடத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகத்தெளிவாக மேற்படி விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார். அடுத்த ஆறுமாதங்கள் பொறுமையாக இருக்குமாறு கூறியுள்ளார். போராட்டங்களைநடத்தவதால் வரிகளை குறைத்துவிட முடியாது என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால் தொழிற்சங்கங்கள்அவற்றைமறைத்து15ஆம் திகதி பாரிய போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்தப்போராட்டத்தினை 20ஆம் திகதி நடத்தினால் என்ன? அவர்கள் 20ஆம்திகதி நடத்தினால் மக்கள் நிலைமைகளை அறிந்து விடுவார்கள். உண்மைகளை உணர்ந்து விடுவார்கள். ஆகவே தான் முற்கூட்டியேபொராட்டங்களை நடத்துகின்றார்கள்.

இவ்வாறான போராட்டங்களை நடத்துவதால் வரிதொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது. நிலைமைகளைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் மக்களைநெருக்கடிகளுக்குள் தள்ளுவதால் நிலைமைகள் மோசமாகும். சர்வதேச நாணயநிதியத்தின் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாதுபோனால் என்னநடக்கும். 2.9பில்லியன் டொலர்கள் கிடைப்பது தாமதமாகும். இதனால் மேலும் நெருக்கடிகள் அதிகரிக்கும். அது பொதுமக்களையே பாதிக்கும் என்றார்.

# அமைச்சர் பவித்ராவுக்கு பதிய பதவி

இலங்கை - ஐரோப்பிய ஒன்றியநாடாளுமன்றநட்புறவு சங்கத்தின்தலைவராகஅமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பதாவது, நாடாளுமன்றத்தின் இலங்கை-ஐரோப்பிய ஒன்றியபாராளுமன்றநட்புறவு சங்கத்திற்கான நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான விசேட கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் இடம்பெற்ற போதே இந்த நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தூதுவர் டெனிஸ் சைபி இதன் போது விசேட விருந்தினராக கலந்து கொண்டதுடன், இந் நிகழ்வில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம் மிக தசநாயக்கவும் கலந்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான உபுல் கலப்பதி, ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் இலங்கை - ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் புதிய செயலாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அழைப்பை நிராகரித்த அமைச்சர் டிரான்

இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்ட அழைப்பினை பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஏற்க மறுத்துள்ளார். அதேநேரம், அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய நான்கு அங்கத்தவர்களும் அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, கடந்த 7 மற்றும் 8ஆம் திகதிகளில் கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்ட போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மனித்திருந்தது.

இதனடிப்படையில் நேற்றையதினம் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அமைச்சர் டிரானுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

எனினும், அமைச் சர் ஆணைக்குழுவில் முன்னிலையாகி இருக்கவில்லை. இதுதொடர்பில் அமைச்சரை தொடர்பு கொள்ள முனைந்த போதும், அது முடியாது போனதோடு, அமைச்சரின் பேச்சாளர் ஒருவர் குறித்த விடயத்திற்கு பதிலளித்தார்.

அவர் கூறுகையில், அமைச்சர் டிரானுக்கு உரிய முறைப்படி உரிய அழைப்பு மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணத்தில் அமைச்சர் ஆணைக்குழுவில் பிரசன்னமாகவில்லை. அமைச்சரை ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கான தீர்மானம் அதன் தலைவரால் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், ஆணைக்குழுவின் ஏனைய நான்கு உறுப்பினர்களும் அழைப்பு குறித்து அறிந்திருக்கவில்லை என்றார்.

இதேவேளை, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை ஆணைக்குழு



விசாரணைக்காக அழைக்கவில்லை. எனினும் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த சில விடயங்களை தெளிவுபடுத்தும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாத்திரமே கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒன்று கூடுவதற்கும் கருத்து வெளியிடுவதற்கும் உரிமையுண்டு தொழிற்சங்கங்கள், தொழில்முறை அமைப்புகள், மாணவர்கள் உட்பட நாட்டில் உள்ள பல்வேறு குழுக்களால் இந்த உரிமை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறான உரிமைகளைப் பயன்படுத்தும்போது, சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்கள், பெட்டன் தடிகள் என்பவற்றை போராட்டத்தில், ஈடுபடுபவர்களை, கலைக்கும் பொறிமுறையாக பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அது பற்றி அமைச்சருடன் கலந்துரையாட வேண்டியது அவசியமாகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘சூப்’ கட்டியை போன்று கொக்கேய்ன் எடுத்துவந்த வெளிநாட்டவர் கைது!





கொழும்பு, மார்ச் 14

350 கிராம் கொக்கேய்னுடன் மெசிடோனிய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சுங்கப் போதைப்பொருள்கட்டுப்பாட்டு பிரிவினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரேஸிலிலிருந்து வந்த மெசிடோனிய பிரஜையின் சந்தேகத்துக்குரிய நடத்தை காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டு அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார் என சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனையின் போது அவரது பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கொக்கேய்ன் கைப்பற்றப்பட்டது.

நான்கு பொதிகளில் இவைவைக்கப்பட்டுசூப்பொதிகள் போன்று பொதி செய்யப்பட்டிருந்தன என சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த போதைப்பொருளின்பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபா என சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ரூபாவின் பெறுமதி உயர்வதாகக் கூறுவது அரசியல் நோக்கத்துக்கான கற்பனை கதை!

## சுனில் ஹந்துனெட்டி இப்படிக் கருத்து



டொலருக்கு நிகராக இலங்கைரூபாவின்பெறுமதி உயர்வதாகக்கூறுகின்றமை அரசியல்நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டஒருகற்பனை கதை என சுனில் ஹந்துனெட்டி தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்தலாமா வேண்டாமா என்று முடிவு செய்யவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் கொந்தளிப்பை சமாளிக்கவும், மக்களை ஏமாற்றவும் இந்த கட்டுக்கதை பயப்படுவதாக கூறியுள்ளார்.

அத்தோடு நாடு அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்றும் தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் கூட கட்டுக்கதைகள் பயன்படுகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில்கொண்டு மத்திய வங்கி முடிவுகளை எடுப்பதில்லை என்றும் இதிலும்அரசாங்கத்தின்உந்துதல் காணப்படுவதாகவும் சுனில் ஹந்துனெட்டி தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தகவல்

மார்ச் மாதத்தின் முதல் 6 நாள்களில் மாத்திரம் சுமார் 25 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை முதல் 08 நாள்களுக்குள் 30 ஆயிரம் ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்தவருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 9.6 வீதம் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 210,184 ஆக பதிவாகியுள்ளது. அதற்கமைவாக ஜனவரியில் 102,545 சுற்றுலாப்பயணிகளும், பெப்ரவரியில் 107,639 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.


இதேவேளை, கடந்த 2022 ஆம் ஆண்டில் மொத்தமாக 719,978 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்திருந்தனர்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தை பரிசீலிக்கும்போது அதிக எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து அதிகளவானோர் வருகை தந்துள்ளனர்.

அதன் எண்ணிக்கை 29,084 ஆக பதிவாகியுள்ளது. மேலும் இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் இருந்தும் அதிகளவானோர் நாட்டுக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளனர்.

# புதைக்கப்பட்ட 105 வயது மூதாட்டியின் தலையை சமூகவலைத் தளத்தில் வெளியிட்ட மூவர் கைது!



உதாகம பொதுமயானத்தில் புதைக்கப்பட்டிருந்த பெண் ஒருவரின் சடலத்தை தோண்டி அதன் தலையை புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார்கள் எனக் கூறப்படும் மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளதாக மஹவ தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குகிடைத்த முறைப்பாட்டின்பிரகாரம், 18, 19 மற்றும் 20 வயதுடைய மூன்று இளைஞர்களேகைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் உதாகம மற்றும் மஹவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள்.

மெனிக்கின்ன பிரதேசத்தில் நபரொருவரின் தேவைக்காக ஆசிரியர் ஒருவர் தலையைக்கேட்டதாகவும் அதன் பிரகாரம் தலையை தோண்டி எடுத்ததாகவும் சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

105 வயது மூதாட்டியின் தலையே இவ்வாறு எடுக்கப்பட்டிருந்தது.

சந்தேக நபர்கள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட தலையுடன் புகைப்படம் எடுத்து அந்த புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளதோடு, அந்த புகைப்படங்களின் அடிப்படையில் குடியிருப்பாளர்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், இறந்த பெண்ணின் உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்து சந்தேக நபர்களை விசாரித்த பின்னர், அவர்கள்கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




# தவறான அறிவிப்புப் பலகையால் திக்கு முக்காடும் பயணிகள்!

கண்டி மாவட்டத்தில் உள்ளமடவளைதெல்தெனிய வீதியில் அமைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் பாரிய தவறு காரணமாக பயணிகள் திக்குமுக்காடுகின்றனர்.

அதாவது கண்டியிலிருந்து மாத்தளைக்கு உள்ள தூரம் சுமார் 30 கிலோ மீற்றர் ஆகும். இருப்பினும் அந்த அறிவிப்புபலகையின்படி10.5 கிலோ மீற்றராகும்.

அதேநேரம் மேற்படி அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ள மடவளையிலிருந்து மாத்தளைக்கு உள்ள தூரம் சுமார் 20 கிலோ மீற்றர் ஆகும். ஆனால் மேற்படி அறிவிப்பு பலகை 2 கிலோ மீற்றர் எனக் காட்டுகிறது.

இந்தக் குளறுபடி காரணமாக வெளியிடங்களில்இருந்து வரும் சாரதிகள் மிகவும் குழப்பமான சூழ் நிலையை எதிர்கொள்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதனைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கேட்கின்றனர்.

# பணிப் புறக்கணிப்பால் நோயாளர்கள் அவதி!



அரசாங்கத்தின் நியாமற்ற வரிக் கொள்கைகள் எதிர்ப்புதெரிவித்தும் அதனை மீள பெறுமாறு வலியுறுத்தியும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று (திங்கட்கிழமை) நான்கு மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதற்கமைவாக நேற்று முதல் நான்கு மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். மேல், தென், கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சுகாதார நிலையங்கள், வைத்தியசாலைகள் உட்பட சகல மருத்துவசேவை நிலையங்களில் உள்ள வைத்தியர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 8 மணிமுதல் ஆரம்பித்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக டிக்கோயா ஆதார வைத்தியசாலை மற்றும் பொகவந்தலாவ, மஸ்கெலியா, நுவரெலியா ஆகிய வைத்தியசாலைகளும்வெறிச்சோடியிருந்தன.

வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பை அறிந்த பெருந்தொகையான நோயாளர்கள் முன்கூட்டியே வைத்தியசாலைகளுக்கு வந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட அதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பை அறியாத நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியமையும் காணக்கூடியதாக இருந்தது.

வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை மட்டுமே வழங்கப்படும் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடதக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயக விரோத செயற்பாடுகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார்!




அண்மைக்காலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கீகாரம் இல்லாத, மக்கள் நிராகரிக்கப்பட்ட ஆட்சியை தக்கவைப்பதற்காக இராணுவத்தைப் பயன்படுத்துகிறார் எனவும், ஜனநாயக விரோத செயற்பாடுகளை மேற்கொண்டு வருவகிறார் எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

காரைநகரில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில்இராணுவ உடையை அணிந்திருப்பது போல்சீருடை அணிந்திருந்து கொண்டு, இராணுவத்துக்கு தொடர்பில்லாத தடிகள் போன்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டுபொதுமக்கள் ஜனநாயக வழியில் போராடுகின்ற போது தாக்குகின்றசம்பவங்கள்அம்பலமாகியுள்ளன.

இன்றைக்கு சர்வதேச ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே முக்கியமாக நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டிய விடயம், தற்போது இராணுவம் என்ற பெயரில் அரசாங்கம் வந்து காடையர்கும்பல்களைவைத்துக்கொண்டுசெயல்படுகின்ற ஒரு நிலைமையாக தான் நாங்கள் பார்க்கின்றோம்.

இராணுவத்தைகேள்விகள் கேட்கின்ற போது அந்த தடிகளோடு உள்ள நபர்கள் இராணுவத்தோடு தொடர்பில்லாதவர்கள் எனக் கூறப்பட்டிருக்கின்ற சூழலில் அந்த தரப்பை அரசாங்கம் வந்து ஜனநாயக அடிப்படையிலே செயற்படுகின்ற மக்களுக்கு எதிராகக் கட்டு வீழ்த்தி இருக்கின்ற ஒரு நிலையிலே, இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு குண்டர்கள், இராணுவத்துடைய புலனாய்வு இயங்கிக் கொண்டிருக்கின்றசூழலிலும்இராணுவத்துக்குத் தெரியாமல் செயற்படுவதாக இருந்தால் அது இந்த நாட்டினுடைய தேசிய பாதுகாப்பிற்கு ஒரு கடும் அச்சுறுத்தல் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் அப்படி நடக்கின்றஒருபின்னணியிலேயே இராணுவம் ஒரு பலவீனமான கட்டமைப்பாக இருக்கிறதாக நாங்கள் கூற முடியாது. இன்றைக்கு இந்த நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட 20 வீதம் இராணுவத்துக்காக ஒதுக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் இராணுவத்துக்குதன்னுடையசெயற்பாட்டை சரியான முறையில் செய்வதற்கு நிதியில்லை என்று கூட சொல்ல முடியாது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போராட்டத்தில் காலாவதியான கண்ணீர் புகைதாக்குதல்மேற்கொண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

இது ஜனநாயகமற்ற ஒரு செயல். - என்றார்.

## சாதாரணதரப் பரீட்சை பிற்போடப்படலாமாம்?

### கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்




கொழும்பு, மார்ச் 14

மே மாதம் நடைபெறவிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப்பரீட்சை பிற்போடப்படலாம்எனகல்வி அமைச்சர்சுசில்பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் பரீட்சை இரண்டு வாரங்கள் தாமதமாகியுள்ள நிலையில் சாதாரண பரீட்சையை ஒத்தி வைக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டுபரீட்சைகளுக்கு இடையில் மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்எனகல்விஅமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

## மலையகத்துக்கான தனி வீட்டு திட்டத்தை அமுல்படுத்த உடன்படிக்கை கைச்சாத்து!



நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்த இந்திய வீடமைப்பு திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக மேலதிக நிதியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன்மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தில் ஒரு வீட்டுக்கு 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும், பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் தற்போது ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு சுமார் 28 லட்சம் ரூபா அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 4 ஆயிரம் தனி வீட்டு திட்டத்தை முழுமைப்படுத்துவதற் காக, அந்த திட்டத்தில் எஞ்சி யுள்ள வீடுகளை புதிய மதிப்பீட்டு விலையின்கீழ் நிர்மாணிப்பதற்கான உடன் படிக்கை நேற்று (திங்கட்கிழமை) கைச்சாத்திடப்பட்டது.

இதற்கானநிகழ்வு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில் இந்திய உயர்ஸ்தானிகர் இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் -

2020 ஆம் ஆண்டில் நான் இராஜாங்க அமைச்சராக பதவியேற்கும்போது இந்தியாவின் 4 ஆயிரம் வீட்டு திட்டம் அமுல்படுத்தப்பட்டு வந்தது. 699 வீடுகளே முழுமைப்படுத்தப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

சுமார் 2 ஆயிரம் வீடுகளில் மின்சாரம், நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருக்கவில்லை. அவற்றை முழுமைப்படுத்தி பய னாளிகளிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

இதற்கிடையில் கொரோனா, அதன்பின்னர் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இந்திய வீட்டுத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் 3 ஆயிரம் ரூபா வரை சீமெந்து விலை அதிகரிக்கப்பட்டது. அன்று ஒரு வீட்டுக்கு 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையில் 28 லட்சம் ரூபா அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விலையின்கீழ் எஞ்சியுள்ள வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந் தம் இன்று (நேற்று) கைச்சாத்திடப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இது முழுமைப்படுத்தப்பட்ட பின்னர் 10 ஆயிரம் வீட்டு திட்டமும் வெகுவிரைவில் அமுல்படுத்தப்படும். - எனத் தெரிவித்துள்ளார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.202இல் வெளியிடப்பெற்றது.

## நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 29 திங்கட்கிழமை 13.03.2023 கதிர் 376

## விமல் வீரவன்ஸ எம்பியை கைது செய்யப் பிடியாணை

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீதிமன்றில் முற்படுவதற்குத் தவறியதை அடுத்து அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இளவரசர் அல் ஹுசைன் இலங்கைக்கு வந்தபோது, பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் 7 பேருக்கு எதிராக கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கொழும்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றில்; வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

2

### நாடாளுமன்ற சிறப்புரிமையைக் கிளப்பும்

# அரச தரப்பினரின் புதிய நகர்வுகளுக்கு கத்தோலிக்கப் பேராயர் கடும் எதிர்ப்பு

### நீதிமன்றத்தின் சுயாதீனம் கேள்விக்குள்ளாகும் எனவும் எச்சரிக்கை

உள்ளூராட்சிமன்றதேர்தலுக்குரிய நிதியை முடக்காது விடுவிக்குமாறு நிதியமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றத்தினால் விடுக் கப்பட்டுள்ள இடைக்கால உத்தரவு தொடர்பில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எழுப்பியுள்ள நாடாளுமன்றச் சிறப்புரிமை பிரச்சினையைக் கடுமையான எதிர்ப்பதாக கொழும்பு பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை விவகாரம் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்படுமாக இருந்தால் அது நீதித்துறையின் சுயாதீனத்தினை கேள்விக்கு உட்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு ஆயரில்லத்தில் இன்று காலை செய்தியாளர்களைச் சந்தித்த பேராயர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங் களுக்கான தேர்தலை நடத்துவதற்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் அறிவித்துள்ளது. ஆனால் அதற்குரிய

2

## நாடு இன்று மீண்டெழ ரணில்தான் காரணம்!

### இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருக்காவிட்டால்நாட்டின் நிலைமை மோசமாக இருந்திருக்கும். ரணிலால்தான் நாடு இன்று மீண்டெழுகின்றது.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டிராமேஷ்வரன்தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்பொதுசெயலாளரும், நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட தோட்டங்களுக்குக் கூடாரங்களும், கதிரைகளும்வழங்கும்நிகழ்வு மருதபாண்டி ராமேஷ்வரன் தலைமையில் நுவரெலியா நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நானும், எமது தேசிய அமைப்பாளர் சக்திவேல் உள்ளிட்டவர்கள்பிரதேசசபையில் இருந்துதான் மக்கள் பிரதிநிதித்துவ அரசியலை ஆரம்பித்தோம். அப்போது மக்கள் தமது பிரச்சினைகளை எம்மிடம் எடுத்துரைப்பார்கள். நாம் எமது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானிடம் கூறி, தேவையான வேலைத்திட்டங்களைப் பெற்றுக்கொள்வோம். இவ்வாறு நாம் மக்கள் சேவை-யாற்றியதால்தான்

2

## தேர்தல் நடக்குமா என்பது சந்தேகமே

### திகா எம்.பி. கூறுகின்றார்




உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தாலும், அத்தினத்தில் தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகமே – என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனிதிகாம்பரம்தெரிவித்தார்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நடத்தப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழு ஆரம்பத்தில் அறிவித்தது. அதன்பின்னர் ஏப்ரல் 25 என அறிவிப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறு அறிவிப்புகள் வெளி வந்தாலும் தேர்தல் நடைபெறுமா என்பதில் எமக்குச் சந்தேகம் தான் உள்ளது.

எது எப்படி இருந்தாலும் எதிர்காலத்தில் என்ன தேர்தல் நடைபெற்றாலும் அதில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியே வெற்றி பெறும் – என்றார்.

## ஜே.வி.பி.க்கு அதிகாரத்தை வழங்கும் அளவுக்கு மக்கள் மடையர்கள் அல்லர்

### மொனராகலைக் கூட்டத்தில் மஹிந்த விளாசல்





நாட்டின் வளங்களை அழித்த ஜே.வி.பியினருக்கு அதிகாரத்தை வழங்கும் அளவுக்கு மக்கள் மடையர்கள் அல்லர்.

–இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மொனராகலை மாவட்டக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிரூபிக்க முடியாதவற்றை வெளியிட்டு மக்களை ஏமாற்றும் வகையில் எதிர்க்கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர்.

கட்சி என்ற ரீதியில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம். எனினும், சேறு பூசும் செயற்பாடுகளுக்கு நாம் எதிரானவர்கள்.

கிராமப்புற மக்கள் எப்போதுமே எம்முடன் உள்ளார்கள். எதிர்வரும் தேர்தலிலும் அனைத்து மக்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு-னவின் வெற்றியை உறுதி செய்வார்கள்.

எமது அரசின் ஆட்சிக் காலத்தில் முழு நாட்டையும் உள்ளடக்கும்

2

## லண்டன் சென்றார் அலி சப்ரி

பொதுநலவாய அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்களின் 22ஆவது கூட்டத்தொடர் இன்று லண்டனில் தொடங்கவுள்ளது.

2

## கிழக்கு உட்பட 4 மாகாணங்களில் மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு

### நாளை காலை வரை தொடரும்

தற்போதைய ஆட்சியின் புதிய வரிக் கொள்கையை எதிர்த்து, நான்கு மாகாணங்களில் அரச வைத்திய அதிகாரிகள் பணிப் புறக்கணிப்பைத் தொடங்கியுள்ளனர்.

மேற்கு, மத்தி, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களின் சகல அரச வைத்திய அதிகாரிக ளும் இந்தப் பணிப்புறக்கணிப்பில் பங்கேற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 8 மணி வரையில் இந்தப் பணிப்புறக்கணிப்பு தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தால் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகள் மற்றும் சிகிச்சை பிரிவுகளின் செயற்பாடுகள் இன்று பெரியளவில் பாதிக்கப்பட்டன.

வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பை அறிந்த பெருந்தொகையான நோயாளர்கள் முன்கூட்டியே வைத்தியசாலைகளுக்கு வந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட அதேவேளை, பணிப்புறக்கணிப்பை அறியாத நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகள் மட்டுமே வழங்கப்பட்டுவருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

தமது இந்தப் போராட்டத்திற்கும் ஆட்சியாளர்கள் மதிப்புக் கொடுக்காமல் இருந்தால் மார்ச் 15ஆம் திகதி நாடு முழுவதும் வைத்தியத்துறை முழுமையாக முடங்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதேவேளை இந்த ஆட்சியின் வரிக் கொள்கையை எதிர்த்து அரச மற்றும் தனியார் வங்கி சேவையாளர்களும் கறுப்பு ஆடை அணிந்து இன்று சேவையில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

### சென். ஜோன் கல்லூரியின் 200 ஆண்டுகளையொட்டி

## புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி யாழ். நகரில்




புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டவும் யாழ்ப்பாணத்தில் இன்று காலை நடைபவனி இடம்பெறறது

சென். ஜோன்ஸ் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனியில் யாழ் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவின் பங்களிப்புடன் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனியாக இடம்பெற்றது.

நடைபவனியானது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி ஊடாக

2

## 'மொட்டு' செயலாளருக்கு இப்படியும் ஒரு மகிழ்ச்சி

தேர்தல்களை தாமதித்த குற்றச்சாட்டுக்கள் பொதுஜனபெரமுனவுக்கு இல்லை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாஹர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2

## ஜே.வி.பிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வகையில் அபிவிருத்திகள் இடம்பெற்றன. நெடுஞ்சாலைகள் மட்டுமன்றி கிராமிய வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு காபர்ட் போடப்பட்டன. அப்போது எதிர்க்கட்சிகள் காபர்ட் வீதியைச் சாப்பிடுவதா? எனக் கேட்டார்கள். எனினும், தற்போது கிராமிய மக்கள் அவர்களின் விவசாய உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்கு அந்த வீதிகள் பெரும் உபயோகமாகக் காணப்படுகின்றன.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் மொனராகலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மின்சாரம் காணப்படவில்லை. எனினும், அந்த மாவட்டத்திற்கு 96 வீதமான மின்சாரத்தை எமது காலத்திலேயே நாம் வழங்கினோம்.

கிராமிய பாடசாலைகளுக்கான வசதிகளையும் மனித வளங்களையும் நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். மொனராகலை வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயர்த்தி அனைத்து வசதிகளையும் நாம் பெற்றுக்கொடுத்துள்ளோம். முதல் தடவையாக மொனராகலை மாவட்டத்துக்கு நீச்சல் தடாகத்தையும் நாமே பெற்றுக் கொடுத்தோம்.

தற்போது கிராமிய மட்ட விவசாயத் துறையில் சற்று பின்னடைவு காணப்படுகின்றது. அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. படிப்படியாக விவசாய நடவடிக்கைகளுக்கு நிவாரணங்களை வழங்கி விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மக்கள் விடுதலை முன்னணியினர் கிராமம் கிராமமாக சென்று நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனத் தெரிவித்து வருகின்றனர்.

எனினும் 1971, 1988 மற்றும் 1989 காலங்களில் நாட்டின் வளங்களை அழித்தது அவர்களே. அவ்வாறான கட்சிக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் அளவுக்கு மக்கள் மடையர்கள் அல்லர் – என்றார்.

## நாடு இன்று.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ம்மை மாகாண சபை முதல் நாடாளுமன்றம் வரை மக்கள் அனுப்பி வைத்தனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பலமானதொரு ஸ்தாபனமாகும். அதன் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் பலமான அமைச்சராக இருக்கின்றார். எனவே, எம்மால்தான் மலையகத்துக்கான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். மக்கள் மென்மேலும் ஆணை வழங்கினால் எமது பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கப்படும். அதற்கு இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை சிறந்த களமாகப் பயன்படுத்திக்கொள்ளவும்.

நாட்டைப் பொறுப்பேற்குமாறு சஜித் பிரேமதாஸவுக்கும் கோட்டாபய ராஜபக்ச அழைப்பு விடுத்தார். எவரும் முன்வரவில்லை. ரணில் விக்கிரமசிங்கதான் அச்சமின்றி பொறுப்பேற்றார். தற்போது நாட்டைப் படிப்படியாக மீட்டு வருகின்றார். உலக நாடுகள் அவரை ஆதரிக்கின்றன. அவர் நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் நிலைமை மோசமாக இருக்கும். நாமும் மக்கள் பக்கம் நின்று – மக்கள் சார்பில் அவரை ஆதரித்தோம். அவரின் அரசில் எமது கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சராக இருக்கின்றார். பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அண்மையில்கூட உலக வங்கியின் ஆதரவுடன், பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் இலவச சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார் – என்றார்.

## விமல் வீரவன்ஸ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீதிமன்றிற்கு வருகை தரவில்லை. இதனையடுத்து அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## அரச தரப்பினரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளூராட்சி மன்ற தேர்த லுக்குரிய நிதியை முடக்காது விடுவிக்குமாறு நிதியமைச்சின் செயலாளர் மற்றும் சட் டமா அதிபர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றத்தினால் விடுக் கப்பட்டுள்ள இடைக்கால உத்த ரவு தொடர்பில் ஆளும் தரப்பு உறுப் பினர்கள் எழுப்பியுள்ள நாடாளுமன்றச் சிறப்புரிமை பிரச்சினையைக் கடுமையான எதிர்ப்பதாக கொழும்பு பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள் ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் களின் சிறப்புரிமை விவ காரம் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்படுமாக இருந் தால் அது நீதித்துறையின் சுயாதீனத்தினை கேள்விக்கு உட்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு ஆயரில்லத் தில் இன்று காலைசெய்தியாளர்களைச் சந்தித்த பேராயர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான திகதியை தேர்தல் கள் ஆணைக்குழு வர்த்தமானியில் அறிவித்துள்ளது. ஆனால் அதற்குரிய நிதி இன் னும் விடுவிக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கையை நிதி அமைச்சு எடுக்கவில்லை.

உயர் நீதிமன்றம் உள்ளூராட்சி மன்றங்களை நடத்துவதற்கான நிதியை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரை மையப்படுத்தி கடந்த மூன்றாம் திகதி இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த இடைக்கால உத்தரவை மட்டுப்படுத்துவதற் காக, ஆளும் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர்கள் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளனர். அவர்களின் கோரிக்கையை சபாநாயகர் நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழுவின் பரிந்துரைக்காக அனுப்பியுள்ளார்.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாக இருந் தால் நிலைமைகள் மோசமடையும். நாடாளுமன்றம் என்பது சட்டங்களை இயற்றுவதற் கான பணியைக் கொண்டது. நீதித்துறை சட்டத்தின் ஆட்சியையும், மக்களின் உரிமைகளை யும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

ஆகவே, நீதித்துறையை மட்டுப்படுத்தும் வகையில் நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத்துறையை பயன்படுத்த முனைவது பொருத்தமற்ற செயற்பாடாகும். அதற்கு நாம் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டில் ஜனநாயக ஆட்சியை உறுதிப் படுத்துவதற்கான அதன் கட்டமைப்புக்களான சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறைகள் தமது பணிகளை முறையாக முன்னெடுக்க வேண்டும் –என்றார்.

## புற்றுநோய்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வந்தடைந்து வைத்தியசாலை வீதியூடாக மீண்டும் பரியோவான் கல்லூரியைச் சென்றடைந்தது

இதில் கல்லூரி ஆசிரியர்கள், பழைய மாணவர் , சகோதர பாடசாலையான சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள் ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், வைத்தியசாலை சமூகம் என 3000 பேர் கலந்து கொண்டனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழப்பாணத்தில் இருக்கின்ற தொன்மையான பல வாகனங்களின் ஊர்தி பவனியும் இதில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.






தொடக்க நிலையில் புற்று நோயைக் கண்டறிவதன் மூலம் அதனை முழுமையாகக் குணப்படுத்தலாம் என்ற செய்தியை மக்களுக்குக் கொண்டுசென்று சேர்ப்பதே இந்த விழிப்புணர்வு நடைபவனியின் நோக்கம். புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வுப் பாடல் ஒன்றும் தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இருநூறாவது ஆண்டில் காலடி பதிக்கும் பரி. யோவான் கல்லூரி, 1823 இல் ஜோசப் நைட் என்பவரால் நல்லூரில் தொடங்கப்பட்டது. இந்தப் பரி. யோவான் கல்லூரி பல சவால்களைக் கடந்து இந்த மண்ணில் தலை நிமிர்ந்து நிக்கும் கல்விக்கழகம் ஆகும் .

## மொட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தலை இல்லாது செய்வதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை அப்போதைய ஆட்சியிடம் காணப்பட்டிருக்கவில்லை. நான்கு உறுப்பினர்களின் வாக்குகள் அதற்கு போதாமையாக இருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அக்கால்தில் 4 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியிடத்தில் அதற்கான ஒத்தழைப்புக்களை வழங்குமாறு கோரப்பட்டது. ஆதனடிப்படையில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக தேர்தலை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகள் அப்போதுதான் தீர்மானிக்கப்பட்டது. தற்போது தேர்தலைக் கோருகின்ற அனைத்து தப்பினரும் அப்போது மாகாண சபைத் தேர்தலை எதிர்த்தவர்கள்தான்.

இவ்வாறான நிலையில் தற்போது உள்ளூட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று அனைவரும் வலியுறுத்தி வருகின்றார்கள். இதுவொரு வேடிக்கையான விடயமாகும்.

அதேநேரம்,பொதுஜன பெரமுனவும் அதன் தலைவர்களும் எப்போதுமே தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பதாக கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அது தவறு.

பொது ஜன பெரமுனவின் தலைவர்கள் மீது தேர்தலை பிற்போட்டார்கள் என்று குற்றச்சாட்டுக்களை வைக்க முடியாது. அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை வைப்பதாக இருந்தால் தேர்தலை வேளையோடு நடத்தினார்கள் என்றுதான் கூறவேண்டும். தற்போதுகூட தேர்தலுக்குத் தயாராகவே பொதுஜனபெரமுன உள்ளது.


## லண்டன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துகொள்வதற்காக நேற்றையதினம் லண்டன் புறப்பட்டுச் சென்றார்.

லண்டன் மெல்பேர்ன் ஹவுஸில் அமைந்துள்ள பொதுநலவாய அமைப்பின் தலைமையகத்தில் இன்று தொடங்கும் இந்தக் கூட்டத்தொடரானது மார்ச் 22ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயணத்தின்போது– பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலாளர் பெட்றிக்கா ஸ்கொட்லண்ட், பொதுநலவாய அமைப்பின் இந்தோ–பசுபிக் வலயத்துக்கான இராஜாங்கச் செயலாளர் இயன்மேரிட்வலின், பொதுநலவாய அமைப்பின் அபிவிருத்தி தொடர்பான இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் கிளெவ்லி ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார் அமைச்சர் அலி சப்ரி.

அத்துடன், இந்தப் பயணத்தின்போது, ருவண்டா, கென்யா, பாகிஸ்தான் மற்றும் மலேசியா உள்ளிட்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும் சப்ரி தனித்தனியான சந்திப்புக்களிலும் பங்கேற்கவுள்ளார்



# உள்ளூராட்சி சபைத் தேர்தல் மீண்டும் பிற்போடப்படலாம்

## ரோஹன ஹெட்டியாராச்சி வருத்தம்

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளில் தாமதம், நாளை மறுதினம் முதல் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள தொழிற்சங்க போராட்டம் உள்ளிட்ட காரணிகளால் தபால்மூல வாக்கெடுப்பை பிற்போட்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் பிற்போடுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது என பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியராச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவுக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதி செயற்படுகிறார். நிதி விடுவிப்பு விவகாரத்தில் இறுதி தீர்மானத்தை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு திறைசேரியின் செயலாளர் பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு அல்ல, நாட்டில் தேர்தல் என்பதொன்று இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளார். தேர்தலுக்கு ஆளும் தரப்பினர் தயாராக இல்லாத காரணத்தால் அவர்கள் தேர்தல் தொடர்பில் அக்கறை கொள்ளவில்லை.

பொருளாதாரப் பாதிப்பு காரணமாக தேர்தலைப் பிற்போட்டால் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களை நடத்துவது நிச்சயமற்றதாகி விடும். தேர்தலை நடத்தியதால் எந்த நாடும் வங்குரோத்து நிலை அடையவில்லை, வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டுமாயின் மக்களாணையுடன் புதிய அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும். நிதி வழங்கினால் வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவோம் என்ற தர்க்கத்தை அரச அச்சகத் திணைக்களம் மீண்டும் முன் வைத்துள்ளது. தபால்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29,30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில் ஒரு வாரம் இடைவெளி உள்ள நிலையில் நிதி இல்லை என்ற தர்க்கம் முன்வைக்கப்படுகிறது.



நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் தாமதப்படுத்தப்படுகின்றன. மறுபுறம் நாளை மறுதினம் முதல் தொழிற்சங்க போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறான காரணிகளால் தபால்மூல வாக்களிப்பை பிற்போட்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மீண்டும் பிற்போடுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

தேர்தலை நடத்தக் கூடாது என்று உறுதியான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்பட்டால் ஒரு சிறந்த தீர்மானத்தை எடுக்க முடியாது. தேர்தலை நடத்துவதற்கு திகதி நிர்ணயிப்பதும், நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை பிற்போடுவதும் என்று இருந்தால் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்களின் நம்பிக்கை சிதைவடையும். – என்றார்.

# காற்றாலைத் திட்டங்களின் திறன்களை அதிகரிக்க அதானி குழுமம் கோரிக்கை

இலங்கையில் 340 மெகாவட் காற்றாலை மின் திட்டங்களை தொடங்க அனுமதி பெற்றுள்ள அதானி குழுமம், அதன் திறனை 500 மெகாவாட்டாக உயர்த்துமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த முன்மொழிவு தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்தார்.

அத்தோடு அநுராதபுரத்தில் இருந்து மதுரை வரை செல்லக்கூடிய மின்சாரம் கடத்தும் பாதைத் திட்டம் ஒன்றை நிர்மாணிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்தார்.

இலங்கையில் மேற் படி திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் இந்தியாவும் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது என்றும் அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்தார்.



# 50 கோடி டொலர்கள் சந்தைக்கு வந்தன!

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

கடந்த ஏழு நாள்களுக்குள் சுமார் 50 கோடி அமெரிக்க டொலர்கள் சந்தைக்கு வந்துள்ளன என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் கைவசம் வைத்திருக்கும் டொலர்களை ரூபாவாக மாற்றுவதற்கு பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொது மன்னிப்புக் காலத்தின் போது டொலர் 365 மற்றும் 370 இற்கு இடையில் வர்த்தகம் செய்யப்பட்ட போதிலும், 3 கோடி டொலர்கள் மாத்திரமே சந்தைக்கு வந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கறுப்புச் சந்தையில் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்கள் மத்திய வங்கியின் ஆலோசனைக்கு செவி சாய்த்திருந்தால், அவர்கள் தங்கள் டொலர்களுக்கு அதிக விலையைப் பெற்றிருப்பார்கள் என்றும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், ரூபாயின் பெறுமதி உயர்வடைய ஆரம்பித்ததில் இருந்து, சுமார் 50 கோடி அமெரிக்க டொலர்கள் சந்தைக்கு வந்துள்ளன என ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தலை நடத்தினால் ஐ.எம்.எவ். நிபந்தனைக்குப் பாதிப்பு

## என்கிறார் சியாம்பல பிட்டிய

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அத்தோடு மீண்டும் அத்தியாவசிய சேவை விநியோக கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே, பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் என கூறினார்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் என்ற ரீதியில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# எரிபொருள் நிலையத்தில் பணியாளருக்கு மிரட்டல்

தென்மராட்சி, மார்ச் 13

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இரவு நேரம் மிரட்டல் விடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு எரிபொருள் நிரப்ப வந்த மோட்டார் சைக்கிளிற்குத், திருத்த வேலை காரணமாக எரிபொருள் நிரப்ப முடியாது என ஊழியர்கள் தெரி வித்துள்ளனர். உடனே மோட்டார் சைக்கி ளில் வந்த இருவரும் ஊழியர்களை மிரட்டி விட்டுச் சென்றுள்ளனர். அண்மையில் நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர் வாள்வெட்டப்பட்ட சம்பவத்தை நினைவூட்டி மிரட்டிவிட்டுச் சென்றிருந்தார்கள் அந்த இருவரும் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிரட்டல் விடுத்த சம்பவம் அங்கிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# தொண்டைமானாறு பரீட்சைகளில் மாற்றம்

மார்ச் 15 ஆசிரிய தொழிற்சங்கங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதை அடுத்து தொண்டமனாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் பரீட்சை அட்டவணை மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை இன்று தொடங்கின. எனினும் அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் கல்வி பயிலும் கல்விப் பொதுத் தராதர மற் றும் உயர்தர மாணவர்களுக்கான தவணை மதிப்பீட்டுப் பரீட்சைகள் இன்று தொடங்கின.

ஆனால் மார்ச் ஆசிரிய தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதனால் அன்றைய தினப் பரீட்சைகளைப் பிற்போடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மார்ச் 15 புதன்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகள் 16 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் வகையிலும், அதனைத் தொடர்ந்து ஏனைய பரீட்சைகளைத் தொடர்ச்சியாக நடத்தும் வகையிலும் புதிய பரீட்சை அட்டவணை தயாரிக்கப்பட் டுள்ளதாக வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது.

### ரயில் கழிப்பறையில் சிசு

# பொலிஸ் பரிசோதகருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலின் கழிவறையில் கைவிட்டுச் சென்ற சிசுவின் பெற்றோர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



இதேவேளை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பெண்ணை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பில் பண்டாரவளை தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகரிடம் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி புறப்படவிருந்த ரயிலின் கழிவறையில் இருந்து குறித்த சிசு மீட்கப்பட்டு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்வாறு சிசுவை கைவிட்டுச்சென்றவர்கள் தொடர்பில் பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதன் அடிப்படையில் சிசுவின் பெற்றோர் என அடையாளம் காணப்பட்ட 26 வயதான இளைஞன் மற்றும் 25 வயதான யுவதியும் பண்டாரவளை மற்றும் கொஸ்லந்த பகுதிகளில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் தெஹிவளை பிரதேசத்தில் பணி புரிந்து வந்துள்ளார் என்பதுடன் திருமணமாகாத நிலையில் குறித்த யுவதி கருவுற்றிருந்தை அறிந்த இளைஞன் அவரை கொழும்புக்கு அழைத்து வந்து தங்க வைத்தார். குழந்தை பிறந்ததும் அதனை யாராவது எடுத்து வளர்க்கட்டும் என்ற நோக்கத்தோடு ரயிலில் வைத்துவிட்டுத் தலைமறைவாகிவிட்டனர்.

சந்தேகநபர்களை நேற்றையதினம் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட பெண்ணை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியமை தொடர்பில் பண்டாரவளை தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகரிடம் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பில் எவ்வாறு செயல் பட வேண்டும் என பொலிஸ் மா அதிபரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு புறம் பாக செயற்பட்டமை தொடர்பிலேயே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் தாயைக் கைது செய்த பொலிஸார் சந்தேக நபரை விசாரிப்பது மற்றும் விசாரணையின் விவரங்களைக் கருத்தில் கொள்ளாமல் பெண்ணுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது தொடர்பாகவும் விசாரணை நடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் உத்தியோகத்தர் வேடமணிந்து கொழும்பு முகத்துவாரத்தில் கொள்ளை!

## இருவர் கைது

கொழும்பு, முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களாக தங்களை அடையாளப்படுத்திக்கொண்டு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த இருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் சிலர் பொலிஸ் உத்தியோகத்தர்களாக வேடமணிந்து கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என மேல்மாகாண புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கொழும்பு வடக்குப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 10 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 24 ,36 வயதுடைய அம்பாந்தோட்டை மற்றும் பல்லேவெல பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது அவர்கள் தங்கியிருந்த அறையில் இருந்து 83 கையடக்கத் தொலைபேசிகள், 4 டெப் இயந்திரங்கள் மற்றும் 5 மடிக் கணினிகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் ஒரே நாளில் திருடப்பட்ட 4 மோ.சைக்கிள்களில் ஒன்று மீட்பு

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பொலிஸாரால் உடுவில் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. நாச்சிமார் கோவில் பகுதியி லுள்ள வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் நேற்றுமுன்தினம் திருடப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சுன்னாகம் பொலிஸாரால் உடுவில் பகுதியில் இலக்கத் தகடு அற்ற நிலையில் குறித்த மோட்டார் சைக்கிள் நேற்று மீட்கப்பட்டுள்ளதோடு மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் தப்பி ஓடியுள்ளார்.

இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளை ஒருவர் செலுத்திச் செல்வதை அவதானித்த சுன்னாகம் பொலிஸார், அவரைப் பின் தொடர்ந்து சென்ற போது சந்தேகநபர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். பொலிஸார் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ற நிலையில், மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் நேற்று மோட்டார் சைக்கிளை நேரில் பார்வையிட்டு உறுதிப்படுத்தினார். அதையடுத்து யாழ். பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக மோட்டார் சைக்கிள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அன்றைய தினம் யாழ். குடாநாட்டில் மேலும் 3 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவை இன்னமும் பொலிஸாரிடம் சிக்கவில்லை. தேடுதல் நடவடிக்கை தொடர்கின்றது.

# எமது எல்லைக்குள் புகுந்து வயிற்றில் அடிக்காதீர்கள்

## இந்திய மீனவர்களிடம் பருத்தி. சங்கத் தலைவர் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

எமது கடல் எல்லைக்குள் புகுந்து வயிற்றில் அடிக்கும் செயலில் ஈடுபடாதீர்கள் என தமிழக மீனவர்களிடம் பருத்தித்துறை மீனவ சங்கத் தலைவர் பிரான்சிஸ் இரட்ணகுமார் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு மயிலிட்டித் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட 16 மீனவர்களைச்சந்தித்தே இவ்வாறு கோரிக்கை விடுத்தார். எமது உறவுகள், எமது மக்கள் எனக் கூறிக்கொண்டு எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் செயலினையே இன்று தமிழ்நாடு மீனவர்கள் மேற்கொள்கின்றீர்கள் கரையில் இருந்து 2 அல்லது 3 கிலோ மீற்றர் வரையில் உங்களது இராட்சத படகுகள் வந்து அடித்துச் செல்கின்றன.

இங்கிருந்து தப்பி போனால் எல்லையில் பிடிப்பதாக கூறுகின்றீர்கள் உங்களை எங்கள் கடற்படையும் பிடிப்பதாக தெரியவில்லை. அவ்வாறானால் நாம் எவ்வாறு தொழிலில் ஈடுபடுவது.

இரண்டு அல்லது 3 மாதங்களிற்கு ஒரு தடவைதான் கடற்படை இந்திய மீனவர்களை பிடிக்பின்றது ஆனால் தினமும் பிடிக்க வேண்டும். எமது சொத்துக்களை சூறையாடிச் செல்கின்றீர்கள், வலைகளை நாசம் செய்கின்றீர்கள் இதனைக் கேட்டால் தொப்புள்கொடி உறவுகள் என்பீர்கள்.

அந்த தொப்புள்கொடியினையே அடுத்து விட்டாச்சு நீங்கள் எங்கள் கடலிற்குள் வராமல் விடுவதுதான் எமக்குச் செய்யும் பெரிய உதவி அல்லது தினமும் பிடிக்குமாறு கடற்படைக்கு நாம் அழுத்தம் கொடுப்போம் என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை


ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் மீதான நம்பிக்கை மக்களிடம் அற்றுப் போகிறது

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் நாள் இடம்பெறும் என்கிற நம்பிக்கை கொஞ்சம் கொஞசமாக எல்லோரிடமும் அற்றுப் போகின்றது. தேர்தல் நடக்குமா நடக்காதா என்கிற நம்பிக்கை மட்டுமல்ல, அரசியல் மற்றும் அரசியல்வாதிகளின் மீதான நம்பிக்கையும் அறவே அற்றுப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசியல்வாதிகள் தங்கள் தேவைக்காக மக்களாட்சி (ஜனநாயகம்), கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், மக்களாட்சியின் நான்கு தூண்கள், தேர்தல், மக்களின் உரிமை, இறைமை, மனித உரிமைகள், பன்னாட்டுச் சமூகம் என்றெல்லாம் தங்க முலாம் பூசிய சொற்களைத்தான் கையாள்கிறார்களே தவிர அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்களை அவர்கள் ஒருபோதும் உணர்ந்து நடந்து கொண்டதே இல்லை என்பதைத் தற்போதைய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

பொருளாதார மீட்சிக்காக நாட்டில் தேர்தல்கள் ஒத்திப் போடப்படவேண்டியவையாக இருந்தால் அதனை அனைத்துத் தரப்பினருடனும் சேர்ந்து ஒருமித்த கருத்தாக எடுப்பதற்கு அரச தலைவர் முயற்சித்திருக்கலாம். அது தொடர்பாக வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொண்டிருக்கலாம். மக்களின் கருத்துக்களைக்கூட அறிந்துகொள்ள முயன்றிருக்கலாம்.

நாடு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், அதனை எந்தவொரு தரப்பும் தனக்கான அரசியல் ஆதாயமாக மாற்றிக்கொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதில்தான் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் கவனமாகவும் அக்கறையுடனும் இருக்கின்றன. தங்கள் அனைவருக்கும் இத்தகைய தருணத்தில் சம வாய்ப்புத் தரப்படவேண்டும் என்பதில், ஒருவர் உயர்ந்தவர் ஒருவர் தாழ்ந்தவர் என்கிற வேறுபாடு இருக்கக்கூடாது என்பதில்தான் அவர்களின் கவனம் இருக்கின்றது.

அத்தகையதொரு நிலையை ஏற்படுத்தி மிகச் சிறந்த தொடக்கத்தை இலங்கை எட்டுவதற்கான வாய்ப்பை அரகலய போராட்டம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இதைத் தனியொருவராக உள்ளே புகுந்து தட்டிப்பறித்தார் என்பதுதான் ரணில் மீது மற்றைய கட்சியினருக்கு இருக்கக்கூடிய கோபம். மூத்த தலைவராக வரலாறும் யதார்த்தமும் புரிந்த தலைவராக ஆட்சிக்கு வந்த பின்னர் தன் மீதான விமர்சனங்களைக் களைந்து அனைவரையும் ஒருங்கிணைத்து நாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டிய ரணில் விக்கிரமசிங்க, தன் மீதான விமர்சனங்களுக்கு மேலாக சந்தேகங்களையும் ஏற்படுத்தி தன்னையொரு சர்வாதிகாரியாக விம்பப்படுத்துவதற்கான வழியிலேயே பயணிக்கிறார்.

அதன் விளைவாக ஏனைய கட்சிகளும் தத்தம் தனி வழிகளில் தமது நலன்களை முக்கியப்படுத்தியே பயணிக்கின்றன. ராஜபக்சகளுக்கு எதிரான அரகலய போராட்டத்தில் ஆதாயம் அடைந்தவர்கள் யார் என்கிற போட்டியில் இன்று ரணிலுக்கு எதிராக ஒன்றிணைவதற்கு எதிர்க்கட்சிகளுக்குள் ஒத்த கருத்து இல்லை.

தேர்தல் முதல் தடவை ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் வீதிக்கு இறங்குவோம், நாட்டையே புரட்டிப் போடுவோம் என்று அறிக்கைவிட்ட தலைவர்களை இரண்டாவது தடவையும் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்கிற நிலை ஏற்பட்டிருக்கின்றபோது முன்னைய வீரியத்துடன் காண முடியவில்லை. தொடர்ந்தும் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதா இல்லையா என்கிற குழப்பத்திலேயே அவர்களது காலம் கழிகிறதுபோலுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது அரசியல் என்பது ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வழியே தவிர மக்கள் நலன் அதில் கிஞ்சித்தும் இல்லை என்பது புலனாகின்றது. இந்த இடத்தில்தான் மக்கள் அரசியல் மீதும் அரசியல்வாதிகள் மீதும் நம்பிக்கை இழக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் அதனை விளைவுகளை அரசியல்வாதிகள் விரைவில் சந்தித்தேயாவார்கள்.

# புதிய தமிழ்க் கூட்டணி விரைவில் உருவாகும்!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



புதிய தமிழ்க் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சி தற்போது முன்னெடுக்கப்படுகின்றது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியாவில், மலையக மக்கள் முன்னணி தலைமையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய அமைப்புக்களை ஒன்றிணைத்து புதிய தமிழ்க் கூட்டணி அமைக்கப்படவுள்ளது.

தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் உள்நாட்டிலும், வெளிநாடுகளுக் கும் தெரியப்படுத்துவதே அதன் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# காங்கேசன்துறை பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்பு!





காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீமன்காமம் பகுதியில் கண்ணி வெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கண்ணிவெடி தனியாருக்கு சொந்தமான வெற்றுக் காணி ஒன்றில் மண்ணில் புதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அன்ரனிபுரம் பகுதியில் கடலில் கரையொதுங்கிய நிலையில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸார் இது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், நீதிமன்றத்தின் நடவடிக்கையின் பின்னர் அந்த வெடிபொருள்களை மீட்டு செயலிழக்க செய்யவுள்ளனர்.

## கண்டி மாணவர் படையணி பயிற்சி முகாமில் மாணவியிடம் பாலியல் சீண்டல் புரிந்த நபர்!

### தலை தெறிக்க தப்பியோடியுள்ளார்

கண்டி, ஹசலக்க மாணவர் படையணி பயிற்சி முகாமில் பயிற்சி முடிந்து, விடுதியில் தூங்கிக்கொண்டிருந்த மாணவியிடம் பாலியல் சீண்டல் புரிந்ததாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி நகரில் உள்ள பிரபல பாடசாலையொன்றைச் சேர்ந்த குறித்த மாணவி இரவில் தனது விடுதி அறையில் நித்திரையில் இருந்தபோது, இனந்தெரியாத நபரொருவர் உடல் ரீதியான பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தப்பிச் சென்றுள்ளார் என அந்த மாணவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஹசலக்க பொலிஸாரும் ரன்தெம்பே மாணவர் படையணி பயிற்சி முகாம் அதிகாரிகளும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பனாகொட இராணுவ முகாம் சிப்பாய் துப்பாக்கி, தோட்டாக்களுடன் மாயம்!

பனாகொட இராணுவ முகாமிலிருந்து ரி – 56 ரக துப்பாக்கி மற்றும் 90 தோட்டாக்களை திருடிய இராணுவ சிப்பாய் ஒருவரை கண்டு பிடிக்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. சந்தேக நபர் துப்பாக்கியுடன் கொட கமவில் உள்ள விஹாரை ஒன்றுக்கு சென்றிருந்தமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

குறித்த ஆலயத்துக்குச் சென்ற இராணுவச் சிப்பாய் விஹாராதிபதியிடம் துப்பாக்கியை எடுத்துச் செல்வதற்கு ஒரு பையை கேட்டதாகவும் கூறப்படுகிறது.


# யாழில் இருந்து 5 மாடுகளை கடத்தி வந்த மூவர் கைது!

## மாடொன்று இறந்த நிலையில் மீட்பு









யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு சட்ட விரோதமான முறையில் மாடுகளை கொண்டு சென்ற கொழும்பு–வாசிகள் உள்ளிட்ட மூவர் கைதுசெய்–யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஒரு மாடு உயிரிழந்த நிலையிலும், ஏனைய நான்கு மாடுகள் உயிருடனும் மீட்கப்பட்டுள்ளன.

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளலாய் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு வீதி சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பலாலி பொலிஸார், சந்தேகத்துக்கு இடமான பட்டா ரக வாகனமொன்றை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது அந்த சிறிய வாகனத்தினுள் இடவசதிகள் இன்றி ஐந்து மாடுகளை மிக நெருக்கமாக அடைத்து நிறுத்தி, மாடுகளை சித்திரவதைக்குட்படுத்தி, சட்ட விரோதமான முறையில் கொழும்புக்கு கடத்திச் செல்லப்படுவதைக் கண்டறிந்தனர்.

அதனையடுத்து வாகனத்தையும், அதில் இறந்துகிடந்த ஒரு மாடு அடங்கலான 5 மாடுகளையும் மீட்டு, வாகனத்தில் இருந்த கொழும்பு – 14 பகுதியை சேர்ந்த இருவரையும், அச்சுவேலி தோப்புப் பகுதியை சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வலிகாமம் பகுதிகளில் கால்நடை திருட்டுக்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வரும் நிலையில் இந்த மாடுகள் களவாடப்பட்ட மாடுகளாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நீதித்துறை அதிகாரத்தைக் குறைக்கும் இஸ்ரேலின் முடிவுக்கு கடும் எதிர்ப்பு



## 10 லட்சம் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலில் நீதித்துறை அமைப்பை மாற்றியமைப்பதற்கான அந்நாட்டு ஆட்சியாளர்களின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 10 வாரங்களாக பொதுமக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வார இறுதியில் அந்தப் போராட்டங்கள் பெருமளவு மக்கள் கலந்துகொண்டு ஆர்ப் பாட்டம் செய்தனர்.

நீதிதுறையின் அதிகாரத்தை கட்டுப்படுத்தவும், நீதித்துறை அதிகாரத்திற்கும், ஆட்சி அதிகாரத்திற்கும் சம நிலையை மீட்டெடுக்கவும் நீதித்துறையில் மாற்றம் கொண்டுவர இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இது மக்களாட்சிக்கு எதிரான செயல் என எதிர்க்கட்சி தலைவர்களும், இஸ்ரேல் மக்களும் போராட்டத்தில் குதித்தனர். இஸ்ரேல் அரசின் முடிவை எதிர்த்து 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் சனியன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் இஸ்ரேல் வரலாற்றிலேயே மிகப்பெரிய போராட்டம் என்று கூறப்படுகிறது.

தலைநகர் டெல் அவிவ்வில் கடந்த சனிக்கிழமை நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. ஏராளமான போராட்டக்காரர்களை காவல்துறையினர் கைது செய்தனர். போராட்டக்காரர் ஒருவர் கூறும்போது, புதிய அரசு எடுக்க விரும்பும் இந்த நடவடிக்கைகள் இஸ்ரேலிய மக்களாட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை என்னால் நிரூப்பிக்க இயலும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில், நீதித்துறை அதிகாரத்தை மாற்றியமைக்கும் தீர்மான வரைப இந்த வாரம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாகப் பிரதமர் நெதன்யாகு அறிவித்திருக்கிறார்.

## அமெ. தடை விதித்த நபர் சீனா பாதுகாப்பு அமைச்சர்

சீனாவின் புதிய பாதுகாப்பு அமைச்சராக தரைப்படை ஜெனரல் லீ சாங்ஃபூ ஞாயிற்றுக்கிழமை நியமிக்கப்பட்டார்.

இவா அமெரிக்காவால் தடை விதிக்கப்பட்டவா என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் இப்போதைய பாதுகாப்பு அமைச்சா வெய் ஃபென்கேவுக்கு பதிலாக லீ சாங்ஃபூவை நியமிக்க சீன நாடாளுமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விண்வெளிப்பொறியாளரானலீசாங்ஃபூ, சீன மக்கள் விடுதலை படையில் ஜெனரலாக பணியாற்றி வருகிறார். 2018ஆம் ஆண்டு ரஷ்யாவின் சுகோய் –35 ரக போா விமானங்கள், எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்ததற்காக சீன தளவாட மேம்பாட்டுத் துறை மற்றும் லீ சாங்ஃபூ மீது அமெரிக்கா தடை விதித்திருந்தது.

ரஷ்யா மீதான தங்கள் தடையை மீறியதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

சீனாவின் பாதுகாப்பு நவீனமயமாக்கல் திட்டத்துக்கு லீ சாங்ஃபூ முக்கியப் பங்காற்றுவார் எனக் கூறப்படுகிறது.

## பாலஸ்தீனர்கள் மூவர் இஸ்ரேல் படையினரால சுட்டுக்கொலை



மேற்கு கரையில் மூன்று பாலஸ்தீனாகளை இஸ்ரேலியப் படையினர் ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொன்றனர்.

தங்கள் பாதுகாப்புப் படையினா மீது துப்பாக்கியால் சுட்டதால் அவாகள் திருப்பிச் சுட்டனர் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்கு கரையில் உள்ள நாப்லஸ் நகரம் அருகே இந்தச் சம்பவம் நடந்ததாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இதன் மூலம் இந்த ஆண்டு இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது.

பாலஸ்தீன ஆயுதக் குழுக்கள் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 14 போ உயிரிழந்துள்ளனா.

தங்களது தாக்குதலில் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களில் பெரும்பாலானோர் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்று இஸ்ரேல் படையினர் தெரிவிக்கின்றனர். ஆனால், போராட்டத்தில் ஈடுபடும் இளைஞாகளும் பொது மக்களுமே கொல்லப்படுகின்றனர் என்று பாலஸ்தீனம் தரப்பில் குற்றம்சாட்டப்படுகிறது.

## சிரியாவில் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்



சிரியாவின் மேற்கு நகரம் ஒன்றில் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் சிரியா அரசுப் படையினா மூவா காயமடைந்தனற்;ா.

இது குறித்து சிரியா அரசு செய்தி நிறுவனமான 'சனா' தெரிவித்திருப்பதாவது:

ஹமா மாகாணம், மசையஃப் நகரம் மீது இஸ்ரேல் படைகள் ஞாயிற்றுக்கிழமை ஏவுகணைத் தாக்குதல் நடத்தியன. இதில் அரசுப் படையினா மூவா காயமடைந்தனர். பல ஏவுகணைகளை சிரியாவின் வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியது எனத் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் தரப்பில் எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. ஈரான் ஆதரவு பயங்கரவாதிகள், குறிப்பாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறிவைத்து இஸ்ரேல் நீண்ட காலமாக தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

சிரியாவில் அதிபா பாா அல்–அசாத்தின் அரசுப் படையினருக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு சண்டையிட்டு வருகிறது.

## இந்தியாவுக்கு 2 ஆஸ்கார் விருதுகள்




இந்த ஆண்டுக்கான ஆஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இந்தியாவிற்கு இரண்டு பிரிவுகளில் மூன்று விருதுகள் கிடைத்திருக்கின்றன.

சிறந்த டாகுமெண்டரி குறும்படப் பிரிவில் இந்தியாவின் 'தி எலிபெண்ட் விஸ்பெரர்ஸ்' (The Elephant Whisperers) ஆவண குறும்படம் ஆஸ்கர் விருது வென்றுள்ளது.

சிறந்த ஒரிஜினல் பாடல் பிரிவில் ஆர்ஆர்ஆர் படத்தின் நாட்டு நாட்டு பாடல் விருதைப் பெற்றது. இந்தப் பாடல் ஏற்கனவே கோல்டன் குளோப் விருதையும் வென்றது.

அகாடமி விருது எனப்படும் 95ஆவது ஆஸ்கர் விருது வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றது. லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள டொல்பி தியேட்டரில் 95ஆவது அகாடமி விருதுகளை ஜிம்மி கிம்மல் தொகுத்து வழங்கி வருகிறார்.

இதில் சிறந்த டாகுமெண்டரி குறும்படப் பிரிவில் இந்தியாவின் 'தி எலிபெண்ட் விஸ் பெரர்ஸ்' (The Elephant Whisperers) ஆவண குறும்படம் ஆஸ்கர் விருது வென்றுள்ளது. தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட இப்படம் ஆஸ்கர் விருது வென்றுள்ளது.




நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்திலுள்ள ஆசியாவின் பெரிய வளர்ப்பு யானைகள் முகாமான தெப்பக்காட்டில், காட்டு நாயக்கர் பழங்குடியினத்தைச் சேர்ந்த பொம்மன், பெள்ளி தம்பதி யானை பராமரிப்பாளர்களாகப் பணிபுரிகின்றனர். 2017ஆம் ஆண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை சரகம் அய்யூர் பகுதியில் தாயிடமிருந்து பிரிந்த ஆண் குட்டி யானை காயத்துடன் சுற்றித்திரிந்தது. இந்த யானையை முதுமலை புலிகள் காப்பகத்துக்கு கொண்டு வந்து, ரகு என பெயர் வைத்து பொம்மனும், பெள்ளியும் பராமரித்து வருகின்றனர். இது தொடர்பான ஆவணப் படமே இப்போது ஆஸ்கர் வென்றுள்ளது.

இயக்குநர் ராஜமௌலியின் 'ஆர்ஆர்ஆர்' படத்தின் "நாட்டு நாட்டு" பாடலுக்கும் விருது கிடைத்துள்ளது.

தெலுங்கு நடிகர்களான ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர், ஆலியா பட், ஸ்ரேயா, அஜய் தேவ்கன் உட்பட பலர் நடித்த திரைப்படம் 'ஆர் ஆர் ஆர்'. சுதந்திரப் போராட்ட வீரர்களான சீதாராம ராஜு, கொமரம் பீம் ஆகியோரின் நட்பை மையமாகக் கொண்டு உருவான இந்தப் பீரியட் படத்துக்கு கீரவாணி இசை அமைத்திருந்தார். வரவேற்பைப் பெற்ற இந்தப் படத்தில் இடம்பெற்றுள்ள 'நாட்டு நாட்டு' பாடல் கோல்டன் குளோப் விருது விழாவில் சிறந்த பாடலுக்கான விருதை சமீபத்தில் வென்றது.

பல்வேறு விருதுகளைப் பெற்று வரும் இப்படம் ஆஸ்கர் விருதுக்கும் அனுப்பப்பட்டது. அதன்படி, 'ஆர்ஆர்ஆர்' படத்தின் "நாட்டு நாட்டு" பாடலுக்கு ஆஸ்கர் விருது கிடைத்துள்ளது. சிறந்த ஒரிஜனல் பாடல் பிரி வில் இசையமைப்பாளர் கீரவாணி ஆஸ்கர் விருதை வென்றார். பாடலை எழுதிய சந்திரபோஸும் ஆஸ்கர் விருது வென்றார்.

விருதுவென்ற இசையமைப்பாளர் கீரவாணி பேசும்போது, ராஜமவுலிக்கு பாட்டு பாடியபடியே நன்றி தெரிவித்தார். மேலும் ஆர்ஆர்ஆர் இந்தியாவின் பெருமை என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக, ஆஸ்கர் விருது விழாவில் 'நாட்டு நாட்டு' பாடல் சிறப்பு பாடலாக இடம்பெற்றது. ஆஸ்கர் விருது மேடையில் 'நாட்டு நாட்டு' பாடலுக்கு அமெரிக்க நடனக் கலைஞரான நடிகை லாரன் காட்லீப் (Lauren Gottlie) உற்சாகமாக நடனமாடினார்.

நடனத்தின்போது அரங்கமும் உற்சாகமடைந்தது. அரங்கத்தில் இருந்தவர்கள் கூச்சலிட்டபடி தங்கள் மகிழ்ச் சியை வெளிப்படுத்தினர். ஆஸ்கர் விருது விழாவில், 'நாட்டு நாட்டு' பாடல் நேரடியாகப் பாடப்பட்டது. இந்தப் பாடலை பாடிய ராகுல் சிப்லிகுஞ்–சும் காலபைரவாவும் ஆஸ்கர் மேடையில் பாடினர். முன்னதாக, நடிகை தீபிகா படுகோன் 'நாட்டு நாட்டு' பாடல் குறித்த அறிமுகத்தை ஆஸ்கர் மேடையில் எடுத்துரைத்தார். பாடல் முடிந்ததும் அனைவரும் எழுந்து நின்று கைதட்டினர்.




## பேருந்து விபத்தில் 6 பேர் உயிரிழப்பு நேபாளத்தில் சோகம்

நேபாளத்தில் மலைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பேருந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்தனா.

நேபாளத்தின் சிந்துளி மாவட்டத்திலிருந்து காத்மாண்டுக்கு 34 பயணிகளுடன் பேருந்து சென்று கொண்டிருந்தது. பிக்கல் ஊரக மலைப் பகுதியில் அந்தப் பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது. இதில், இரு பெண்கள், ஒரு குழந்தை உள்பட 6 போ சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று காவல்துறையினா தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 29 பேர் காயமடைந்தனா. அவாகளில் பலத்த காயமடைந்த 5 போ சிகிச்சைக்காக காத்மாண்டுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



## சிலிகான் வேலி வங்கியை வாங்குகிறார் எலான் மஸ்க்?

அமெரிக்காவில் வங்கு ரோத்து அடைந்துள்ள மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான, சிலிகான் வேலி வங்கியை (எஸ்விபி) வாங்கும் யோச னையை உலகப் பணக்காரர் எலான் மஸ்க் வெளிப்படுத்தியிருப்பது பரப்பரப்பை ஏற்ப டுத்தியிருக்கிறது.

அண்மையில் அந்த வங்கி வங்குரோத்தடைந்தது.

அந்த வங்கியின் பங்கு மதிப்பு தொடர்ந்து சரிந்தது இதற்கு காரணம்.

அதனால் அந்த வங்கி யில் வைப்புத்தொகை வைத்திருந்த நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் வைப்புத் தொகைக ளைத் திரும்பப் பெற்றனர்.

இந்நிலையில், அந்த வங் கியை வாங் கும் திட்டத்திற்குத் தான் தயார் என்று எலான் மஸ்க் கீச்சகத்தில் பதிவிட் டுள்ளார்.

அமெரிக்க கேமிங் நிறுவ னமான ரேசரின் இணை நிறுவனரும், தலைமை செயல் அதிகாரியுமான மின்– லியாங் டான், முறிந்துபோன சிலிகான் வேலி வங்கியை வாங்கி அதனை டிஜிட்டல் வங்கி யாக மஸ்க் மாற்றவேண்டும் என கீச்சகப் பதிவு மூலம் பரிந்து ரைத்தார். ட்விட்டர் நிறுவனம் சிலிகான் வேலி வங்கியை வாங்கி அதை டிஜிட்டல் வங் கியாக மாற்ற வேண்டும் என நான் நினைக்கிறேன் என அவர் அந்த பதிவில் சொல்லி இருந்தார். அதற்கு பதில் கொடுத்துள்ளார் மஸ்க்.

இந்த யோசனைக்கு தான் தயார் என மஸ்க் பதில் அளித்துள்ளார். அவரது இந்த ட்வீட் உலகளவில் கவனம் பெற்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கடைசிப் பந்தில் நியூஸி. திரில் வெற்றி

# போராடித் தோற்றது இலங்கை






நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி தனது முழுப் போராட்டத்தையும் வெளிப்படுத்தியபோதும் கடைசிப் பந்தில் தோல்வியடைந்தது.

கிறைஸ்ட்சர்ச் டெஸ்ட் போட்டியின் கடைசி நாளான இன்று கேன் வில்லியம்சன் (ஆட்டமிழக்காமல் 121) அதியற்புத சதத்தை அடிக்க, நியூசிலாந்து அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெறும் இலங்கையின் நம்பிக்கை தகர்ந்தது.

அதுவும் கடைசி நேர நாடகம் மிகப் பெரிய விறுவிறுப்பு. மழையால் பாதிக்கப்பட்டு ஆட்டம் சில மணி நேரங்கள் கழித்தே இன்று தொடங்கியது. அதனால் கடைசி ஓவர் வரை ஆட்டம் சென்றது, கடைசி ஓவரை அஷிதா பெர்னாண்டோ வீசினார். கடைசிப் பந்து பவுன்சர் பந்து, கேன் வில்லியம்சன் புல் ஆட முயன்று தோல்வி அடைந்தார், ஆனால் அதற்குள் ஒரு பை ரன் ஓடி விட முயல விக்கெட் கீப்பர் ரன்னர் முனைக்கு த்ரோ அடிக்க அது நேராக ஸ்டம்பைத் தாக்க, திக் திக் கணத்தின் முடிவில் கேன் வில்லியம்சன் டைவ் அடித்து ரீச் ஆகியிருந்தார். நியூஸிலாந்து கடைசி பந்தில் வெற்றி பெற்று இலங்கையின் ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிக் கனவைத் தகர்த்தது. வில்லியம்சன் முழந்தாளிட நீல் வாக்னர் அவரைத் தழுவிக்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஒரு நாளுக்குச் சராசரியாக 250 ஓட்டங்கள் அடிக்கப்பட்டு வந்த நிலையில் வெற்றிக்கு இலக்கான 285 ஓட்டங்களை நியூஸிலாந்து விரட்டி வெற்றியைப் பெற முயற்சிக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

கடைசி இன்னிங்ஸில் 285 ரன்கள் எடுத்தால் நியூசிலாந்துக்கு வெற்றி என்கிற நிலையில் 9 விக்கெட்டுக்கள் கைவசம் இருக்கையில் 5ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது.

நியூஸிலாந்து வீரர்கள் விரைவாக ஓட்டங்கள் எடுத்து இலக்கை நோக்கி வெற்றிகரமாகப் பயணித்தார்கள்.

ஆட்டம் மீண்டும் தொடங்கியபோது, டாம் லேதம் (25) லெக் ஸ்பின்னர் பிரபாத் ஜெயசூர்யாவால் வீழ்த்தப்பட்டார், ஹென்றி நிக்கோல்ஸ் 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்துவுடன் முதல் இன்னிங்சில் சதம் அடித்த டேரில் மிட்செல் இறங்கினார். நான்காவது விக்கெட்டுக்கு வில்லியம்சனுடன் இணைந்து 142 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்து மிட்செல் 81 ஓட்டங்கள் குவித்து நியூசிலாந்தை வெற்றியின் விளிம்பில் கொண்டு சென்றுவிட்டார்.

ஆனால் அப்போதுதான் பெர்னாண்டோ தன் யார்க்கர்கள் மூலம் மிட்செல் மற்றும் டாம் பிளண்டெல் (3) ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்து இலங்கைக்கு புதிய நம்பிக்கை அளித்தார். மைக்கெல் பிரேஸ்வெல் (10) டீப் மிட்விக்கெட்டில் பிடிகொடுத்து வெளியேறினார். கடைசி 2 ஓவர்களில் நியூசிலாந்து அணிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், அணித் தலைவர் டிம் சவுத்தி ஆட்டமிழந்ததாலும், மாட் ஹென்றி ரன் அவுட் ஆனதாலும் ஆட்டம் உச்சகட்ட பதற்றத்தை எட்டியது.

டேரில் மிட்செல் 86 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 81 ஓட்டங்கள் எடுத்தார். மூத்த வீரர் கேன் வில்லியம்சன் கடைசிவரை களத்தில் நின்று நியூசிலாந்து அணியை வெற்றி பெறச் செய்தார். சதமடித்த பிறகும், மற்றைய வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்த நிலையில் கீழ்வரிசையில் ஆடிய பந்துவீச்சாளர்களை வைத்துக்கொண்டு இலக்கை அடைந்தார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன. வில்லியம்சன் தொடர்ந்து போராடி கடைசிப் பந்தில் மிக வேகமாக ஓடி வெற்றியை நியூசிலாந்துக்கு வழங்கினார். அவர் 194 பந்துகளில் 121 ஓட்டங்கள் எடுத்துக் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 70ஆவது ஓவரில் 8 இலக்குகளை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்று நியூஸிலாந்து வெற்றி பெற்றது.

இலங்கை அணியும் கடைசி ஓவர் வரை வெற்றிக்காகத் தீவிரமாகப் போராடியது. அஸித்த பெர்னான்டோ 3 இலக்குகளையும் பிரபாத் ஜெயசூரிய 2 இலக்குகளையும் ராஜித, குமார ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

இலங்கை அணியின் அண்மைக் கால ஆட்டங்கள் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டிருந்த நிலையில் வெளிநாட்டு மண்ணில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 300க்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றும் எதிரணியின் அனைத்து இலக்குகளையும் வீழ்த்தியும் கடுமையான சவாலை வெளிப்படுத்திய இலங்கை அணியின் ஆட்டம் பாராட்டத்தக்கது. அடுத்த ஆட்டத்தில் மேலும் சவாலை வெளிப்படுத்துவதற்கான தன்னம்பிக்கையை இது இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அசித்த பெர்னாண்டோ (3-63) சிறப்பாக பந்து வீசினார், ஆனால் கடைசி பவுன்சர் பந்தில் வில்லியம்சன் மற்றும் நீல் வாக்னர் வெற்றிக்காக ஓடிய உதிரி ஓட்டம் மிகவும் நெருக்கமானது. வில்லியம்சன் முழு நீளமாக டைவிங் செய்து வெற்றியை உறுதி செய்தார்.

முதுகில் ஏற்பட்ட காயம் மற்றும் வலது தொடை எலும்பு முறிவு காரணமாக இரண்டாவது டெஸ்டில் விளையாடாத வாக்னர், நியூசிலாந்துக்கு 3 பந்துகளில் 5 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களம் இறங்கினார். பெர்னாண்டோவின் கடைசி இரண்டு பந்துகளும் ஷார்ட் பிட்ச் பந்துகளாக இருந்த நிலையில், கடைசி பந்து டாட் பந்து ஆனால் முன்னதாக வில்லியம்சன் ஒரு பவுண்டரியை அடித்திருந்தார்.

## மும்பை அசத்தல் வெற்றி

யுபி வோரியாஸ் அணிக்கு எதிரான டபிள்யுபிஎல் லீக் 10ஆவது ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய மும்பை இண்டியன்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. முதலில் ஆடிய யுபி வோரியாஸ் அணி 159/6 ஓட்டங்களையும், பின்னா ஆடிய மும்பை 164/2 ஓட்டங்களையும் குவித்தன.

இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் மும்பை பிரபோர்ன் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற யுபி வோரியாஸ் துடுப்பாட்டத்தைத் தோவு செய்தது. தொடக்க ஆட்டக்காரர் தேவிகா வைத்யா 6, கிரண் நவ்கிரே 17 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

அதன்பின் அணித் தலைவர் அலிஸா ஹீலி– சகலதுறை விரர் டஹ்லா மெக்ராத் இணை அதிரடியாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயாத்தியது. அலிஸா ஹீலி 1 சிக்ஸா, 7 பவுண்டரியுடன் 58 ஓட்டங்களையும், டஹ்லா 9 பவுண்டரியுடன் 50 ஓட்டங்களையும் விளாசி அரைசதம் பதிவு செய்தனர். எஸ்ஸல்ஸ்டோன் 1, தீப்தி சாமா 7 என்று வெளியேறிய நிலையில், சிம்ரன் 9, ஸ்வேதா 2 ஓட்டங்களுடன் இறுதி வரை களத்தில் இருந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 159/6 ஓட்டங்களைக் குவித்தது யுபி வோரியாஸ். மும்பை தரப்பில் சைகா இாக் 3–33, அமெலியா கொ 2–33 இலக்குகளை வீழ்த்தினர்.

160 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களம் கண்ட மும்பை அணி 17.3 ஓவாகளில் 164/2 ஓட்டங்களைக் குவித்து அசத்தல் வெற்றி பெற்றது.

ஹெய்லி மேத்யூஸ் 12 ஓட்டங்களுடன் வெளியேற, அதிரடியாக ஆடிய யஸ்திகா பாட்டியா 1 சிக்ஸா, 8 பவுண்டரியுடன் 42 ஓட்டங்கள் குவித்தார்.

அணித் தலைவரர் ஹாமன்ப்ரீத் கௌா 1 சிக்ஸா 9 பவுண்டரியுடன் 53 ஓட்டங்களையும்களையும், நடாலி ஷிவா 1 சிக்ஸா, 6 பவுண்டரியுடன் 45 ஓட்டங்களையும் விளாசி தங்கள் அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

## இந்திய – ஆஸி. ஆட்டம் சமநிலை தொடரை வென்றது ரோகித் அணி

ஆமதாபாத்தில் நடைபெற்ற 4வது டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. எனினும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2–1 என வென்றுள்ளது இந்திய அணி.

ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 167.2 ஓவர்களில் 480 ஓட்டங்கள் எடுத்தது. கவாஜா 180, கிரீன் 114 ஓட்டங்கள் எடுத்தார்கள். அஸ்வின் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 571 ஓட்டங்கள் எடுத்தது. விராட் கோலி 186, ஷுப்மன் கில் 128 அக்ஷர் படேல் 79 ஓட்டங்கள் எடுத்தார்கள். ஆஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸை இன்றும் தொடர்ந்தது.

5ஆவது நாள் உணவு இடைவேளையின்போது ஆஸ்திரேலிய அணி, 36 ஓவர்களில் 1 இலக்கு இழப்புக்கு 73 ஓட்டங்கள் எடுத்தது. குனேமன் 6 ஓட்டங்களில் அஸ்வின் பந்தில் எல்பிடபிள்யூ ஆனார். எனினும் டிஆர்எஸ் வழியாக முறையீடு செய்யாமல் கிளம்பினார். ஆனால் ரீப்ளேவில் அது ஆட்டமிழப்பு இல்லை எனத் தெரிந்தது. ஹெட் 45, லபுனே 22 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

அதன்பிறகும் நன்கு விளையாடிய டிராவிஸ் ஹெட், 90 ஓட்டங்களில் அக்ஷர் படேல் பந்தில் ஆட்டமிழந்தார். ஆஸ்திரேலிய அணி 78.1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்கள் எடுத்தபோது இன்னிங்ஸை டிக்ளேர் செய்தது. லபுனே 63, ஸ்மித் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். இதையடுத்து 4ஆவது டெஸ்ட் ஆட்டத்தை சமநிலை செய்து இரு அணிகளும் கைகுலுக்கிக் கொண்டன.

இந்திய அணி டெஸ்ட் தொடரை 2–1 என வென்றுள்ளது.

இலங்கையின் தோல்வி காரணமாகப் புள்ளிகளின் அடிப்படையில் இந்திய அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தகுதியடைந்துள்ளது.

ஜூன் 7–11 தேதிகளில் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியா – ஆஸ்திரேலியா அணிகள் மீண்டும் மோதவுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.03.2023 இல் வெளியிடப்பெற்றது.